விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 01 செவ்வாய்க்கிழமை (18.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## போராட்டங்கள் அதிகரித்தால் நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படும்

### சுரேஷ் எம்.பி. எச்சரிக்கை



(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு கொடுக்கவில்லை. அந்தவகையில் தங்கள் இஷ்டத்திற்கேற்ப குடியேற்றங்களை ஏற்படுத்தவோ, நிலங்களைச் சுவீகரிக்கவோ அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவோ நாம் அனுமதிக்க முடியாது. அவ்வாறு இடம்பெற்றால் இப்படியான போராட்டங்கள் மேலும் மேலும் அதிகரித்து இலங்கையில் அநாவசியமான ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்கும். அது ஒட்டுமொத்த இலங்கைக்கும் நல்லதொரு நிலையாக இருக்காது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## உரிமைகளை பாதுகாப்போம்–ரணில்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையில் அரசியல்வாதிகளை கேந்திரப்படுத்திய நிர்வாகம் அன்றி நகரவாசிகளை மையப்படுத்திய நிர்வாகம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் முதல்வராக ஏ.ஜே.எம்.முசம்பில் மற்றும் பிரதி முதல்வராக டைட்டஸ் பெரேரா ஆகியோரின் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளை மையப்படுத்தி மக்களை ஏமாற்றி காபற் இடுவதாக கூறி வெற்றிபெறும் நிர்வாகத்தை உருவாக்க இந்தத் தேர்தலில் தாம் போட்டியிடவில்லை.

(02ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நவம்பரில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நவம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் கையளிக்கப்படும் என ஆணைக்குழு நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை அடுத்த மாதம் முறையாக வெளியிடப்படும்வரை அதன் எந்தவொரு பகுதியும் வெளியில்வராதுஎன ஆணைக் குழுவின் ஊடகப்பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## நில அபகரிப்புக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்

### பொலிஸ், இராணுவம் குவிப்பு

(வவுனியா)

வடக்குக்கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு, அத்துமீறிய குடியேற்றங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6ஆவது சிங்கள வெலிஓயா பிரதேச செயலகமாக உருவாக்குதற்கான முயற்சி ஆகியவற்றுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை 7.00 மணிக்கு வவுனியாநகரசபைமைதானத்தில் இவ் உண்ணா (20ஆம் பக்கம் பார்க்க)



## துமிந்த சில்வாவை சந்தேக நபராக கருத முடியாது - அரசாங்கம்

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபராகக் கருதமுடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்படுகாயமடைந்துசிகிச்சை பெற்றுவரும் துமிந்த சில்வா, பாரத படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அல்ல என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத் (02ஆம் பக்கம் பார்க்க)

## குறைநிரப்பு பிரேரணை இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)


அடுத்த வருடத்திற்கான வரவு செலவு திட்ட குறை நிரப்பு பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அடுத்த வருடத்தில் அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ஆயிரத்து 115 பில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு அரசின் செலவு இரண்டா (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக் கழகத்தில்

## கல்விச் செயற்பாட்டை புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மீது இனந்தெரியாதோர்மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று அனைத்துப் பீட மாணவர்களும் தமது கல்விச் செயற்பாடுகளை புறக்கணித்ததோடு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

யாழ்.கந்தர்மடம் பழம் வீதியில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இந்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் காயமடைந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் (வயது 24) யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் மாணவர் மீதான தாக்குதலைக் கண்டித்து அனைத்துப் பீட மாணவர்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் மாணவர்கள் தமது எதிர்ப்பை காட்டும் வகையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் கலாசாலையின் செயற்பாடு வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் கல்விச்செயற்பாடுகள் வழமைபோன்று நேற்று நடைபெற்றதாக அவர் தெரிவித்தார். கலாசாலையின் கல்விச் செயற்பாடுகளை கடந்த 10ஆம் திகதியிலிருந்து அங்கு கல்விகற்கும் ஆசிரிய மாணவர்கள் புறக்கணித்து வந்தனர்.

இந் நிலையில் நேற்று ஆசிரிய மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை வழமை போன்று மேற்கொண்டனர்.

இருப்பினும் கலாசாலையின் நற்பெயரை பாதிக்கும் வகையில் வெளியான செய்திக்கு எதிர்ப்புக்காட்டும்வகையில் அவர்கள் கைகளில் கறுப்புத்துணிகளை கட்டியிருந்தனர். (எ-6)

# நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்., ஆசிரியர்களுக்கு

நல்லூர்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளில் திருத்தங்கள் செய்யவேண்டி இருப்பின் அதற்கானவிசேடசேவை யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இன்றும் நாளையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் இவ்விரு தினங்களில் தங்களின் சுயவிபரக் கோவையை பூரணப் படுத்திக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந-8)


## புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்

நான் தயாரித்து வெளியிட்ட வாழ் வாங்கு வாழ்வியல் தேவாரத் திரட்டு, மதமாற்றம், வேறு 25 வகையான கை நூல்கள் சைவ நூல் நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்க விரும்புகிறேன்.

தொடர்பு: - க.மகேசன்
இல. 6, இராணி வீதி, நல்லூர்.
T.P.: 0212221652, 0212221651 (இ)


# அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட சிறப்புப் பிரிவை உருவாக்கியது இந்தியா!

இந்தியாவின் நிதியுதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும், அபிவிருத்தித் திட்டங்களை கண்காணித்து ஒருங்கிணைப்பதற்காக கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தில் சிறப்பு அலகு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

அபிவிருத்தி ஒருங்கிணைப்புப் பிரிவு என்ற பெயரில் உருவாக்கப்படவுள்ள இப் புதிய அலகுக்கு பொறுப்பாக சிறப்பு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

இவர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை கண்காணித்து ஒருங்கிணைப்பதற்கான பணிகளைச் செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா ஐயாயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை அறிவித்திருந்தது.

அத்துடன் வடக்கு, தெற்குப் பகுதிகளுக்கான புகையிரத பாதையை புனரமைக்கும் திட்டங்களுக்கும் எண்ணூறு மில்லியன் டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது.

ஆபகானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் தமது உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை கண்காணித்து ஒருங்கிணைப்பதற்கு இந்தியா இத்தகையதொரு சிறப்புப் பிரிவு ஒன்றை கடந்த ஆண்டு உருவாக்கியிருந்தது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் இலங்கைக்கு அண்மையில் மேற்கொண்டிருந்த விஜயத்தைத் தொடர்ந்தே இலங்கையிலும் இத்தகையதொரு சிறப்புப்பிரிவை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது வீடுகளை இழந்த மக்களுக்காக இந்தியாவின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் மெதுவாக முன்னெடுக்கப்படுவது குறித்து இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கனகசபை - உருத்திரகுமாரன் (J.P)
[B.A, Dip. in Ed., M.A (Tamil)]

32 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக கடமையாற்றிய திரு. கனகசபை - உருத்திரகுமாரன் (J.P) [B.A, Dip. in Ed., M.A (Tamil)] அவர்கள் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியில் 8 வருடங்களாக ஆசிரியராக அரும் பணியாற்றி இன்று தீவகக் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் (தமிழ்) பதவியுயர்வு பெற்றுச் சென்றமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெறக் கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி,
உரும்பிராய். (இ)


# மாணவன் மீது தாக்குதல் ஆசிரியர்கள் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவத்தை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளும் பக்குவம் எமது சமூகத்தில் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். வன்முறை எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வைத் தராது. இத் தாக்குதல் சம்பவத்தை யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என அவர்களின் கண்டனஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட மாணவன் ஒருவரின் சடலம் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

செங்குந்தா இந்துக் கல்லூரியில் தரம் 9இல் கல்வி பயிலும் கொக்குவில் இந்து நாமகள் வீதியில் வசிக்கும் அரியதாஸ் கிருஷாந்தன் (வயது 14) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது தந்தையார் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில் பிரஸ்தாப மாணவன், தாய் மற்றும் 4 சகோதரர்களுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றிரவு 7.30 மணியளவில் அவரது அறைக்குச் சென்ற போது மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக தாயார் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (ச-8)

# தரம் குறைந்த பெற்றோல் இன்று நஷ்டஈடு கிடைக்கும்

தரம் குறைந்த பெற்றோலினால் பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு இன்று செவ்வாய்க் கிழமை நஷ்டஈடு வழங்கப்படும் எனப் பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கை நவம்பர் 15ஆம் திகதி பூர்த்தியாகும் எனவும் அவ்வமைச்சுத் தெரிவித்துள்ளது.

நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப் பங்களை செப்டெம்பர் 5ஆம் திகதிவரை அமைச்சு ஏற்றுக் கொண்டிருந்தது. நஷ்டஈடு பெறத் தகுதி பெற்றோருக்குப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான இடம், திகதி என்பன அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.(ஏ)

## உரிமைகளை...

அரசியல்வாதிகளுக்குத் தேவையான விதத்தில் செயற்பட இடமளிக்க முடியாது. மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே செயற்பட வேண்டும்.

அனைவரதும் உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றாடல் பாதுகாப்பு, மக்களுக்கான சேவைகள் கிடைக்கின்றதா என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

மக்களும் தமது நிர்வாகிகளிடம் இது தொடர்பிலான எதிர்பார்ப்புகளைக் கொண்ட கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (எ-9)

## குறைநிரப்பு...

யிரத்து 220 பில்லியன் ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.அதேவேளை எதிர் வரும் நவம்பர் மாதம் 21-ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நவம்பர் 22-ம் திகதி முதல் 30-ம் திகதி வரை வரவு செலவுத்திட்டம் தொடர்பான 2-ம் வாசிப்பு விவாதம் நடைபெறவுள்ளது. அதேவேளை வரவு செலவுத்திட்டத்தின் 3-வது வாசிப்பு தொடர்பான விவாதம் அதன் பின்னர் 17 நாட்களுக்கு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## துமிந்த...

தின் பணிப்பாளர் லக்ஸ்மன ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வா ஒரு நோயாளி எனவும் அவர் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டமைக்கு எவ்வித ஆதாரங்களும் கிடையாது எனவும் லக்ஸ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவத்திற்கு முன்னதாகவே இந்தியாவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விசா பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாரத படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாரதவை துமிந்த சில்வாவே முதலில் சுட்டதாக பாரதவின் சாரதி சமன் சமந்த புலனாய்வு பிரிவிற்கு அளித்த சாட்சியில் தெரிவித்துள்ளார். (ஏ)


சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அனுசரணையுடன்
UR Friend Foundation நிறுவனத்தால் நடத்தப்படும்
பாடசாலை மாணவர்களுக்கான

## கட்டுரைப் போட்டி-2011

நிபந்தனைகள்

1. போட்டிகள் மூன்று பிரிவுகளாக தமிழ்மொழியில் நடைபெறும்.
   கனிஷ்ட பிரிவு (தரம் 6,7,8)
   தலைப்பு:- "சிறுவர் மகிழ்ச்சியில் சமூகத்தின் பங்கு"
   500 தொடக்கம் 750 சொற்கள்
   இடைநிலைப் பிரிவு (தரம் 9,10,11)
   தலைப்பு:- "சமூகத்தில் சிறுவர்கள் நன்னிலை பெறுவதற்கான வழிகள்"
   750 தொடக்கம் 1000 சொற்கள்
   சிரேஷ்ட பிரிவு (தரம் 12,13)
   தலைப்பு:- "யுத்தம் முடிவடைந்த நிலையில் தற்போதைய சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்"
   1000 தொடக்கம் 1500 சொற்கள்
2. ஆக்கங்கள் யாவும் சுயவிபரக் கோவையுடன் அனுப்பப்பட வேண்டும்.
3. போட்டிக்கான கட்டுரைகள் யாவும் மாணவனுடைய சொந்த ஆக்கம் என பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. கட்டுரைகள் 30.10.2011 இற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.
5. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
6. யாழ்ப்பாணத்தில் 07.11.2011 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சிறுவர் தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
UR Friend Foundation. #92, Brown Road, Jaffna.
மேலதிக தகவல் தொடர்புகளுக்கு:-
email:urfriendfoundation@yahoo.com
T.P.: 021 373 4742 (6618)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி யோ. லக்ஷினி

யா/ குடத்தனை அ.த.க. வித்தியாலய மாணவி செல்வி யோ. லக்ஷினி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததை பாராட்டுவதுடன் அவர் கல்வியில் மேலும் பல சிறப்புக்களைப் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

- பாடசாலைச் சமூகம்
யா/ குடத்தனை அ.த.க. வி.,
குடத்தனை. (சி-4757)



தீபாவளியை முன்னிட்டு



## நல்லி சில்க்ஸ் மற்றும் ராசி சில்க்ஸ் இன்

இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை அட்டகாசமான ஆடைத்தள்ளுபடி....

தீபாவளியை முன்னிட்டு இந்தியா மற்றும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகள் குறைந்த விலையில்....



MEGA SALE

ராசி சில்க்ஸ் கல்யாணப்பட்டுப்புடைவைகளின் ஏகராசியான நிறுவனம் நல்லி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P:021 222 5571 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 5573

# இன்று ஒரு தகவல்

## அந்தக் கிளிக்கு என்ன ஆயிற்று?

ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரிலே யாருக்கு என்ன பிரச்சினை வந்தாலும் சரி... உடனே இவரைத் தேடி வருவார்கள்.

"எனக்கு இது மாதிரி ஒரு சிக்கல்..." என ஆரம்பித்து விபரத்தைக் கூறுவார்கள். இவர் அவர்கள் கூறுவதைக் கவனமாகச் செவிமடுத்து அதன் பின்னர் அந்தச் சிக்கலிலிருந்து எப்படி விடுபடலாமென்று பொருத்தமான ஒரு யோசனையைச் சொல்வார்.

அவர்களும் இவர் கூறுகிறவற்றை செய்தால் சிக்கலில் இருந்து மீண்டு கொள்வார்கள். அந்த அளவுக்கு இந்தப் பெரியவர் மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். அப்படிப்பட்ட இவருக்கு ஒரு பிரச்சினை திடீரென ஏற்பட்டது.

இவர் ஒரு கிளியை ஆசையாக கூண்டிலே வைத்து வளர்த்து வந்தார். அது ஒரு அழகான பச்சைக்கிளி... அந்தக் கிளி பெயரில் இவருக்கு மிகவும் பிரியம். தனியாக இருக்கிற போதெல்லாம் அந்தக் கிளியிடம் போய் ஏதாவது பேசிக் கொண்டிருப்பார். அந்தக் கிளி ஒரு நாள் நிறைவாகச் சாப்பிடவில்லையென்று இவருக்கு கவலை. இருவருக்கும் இடையில் அவ்வளவு நெருக்கம் ஏற்பட்டு விட்டது.

அந்தக் கிளிக்கு திடீரென ஒருநாள் ஏதோ நோய் பீடித்தது. அது அடிக்கடி இருமல் மாதிரி செய்ய ஆரம்பித்தது. இவர் கலங்கிப் போய்விட்டார்.

உடனே ஓடிப்போய் பறவைகளுக்கெல்லாம் வைத்தியம் பார்க்கிற வைத்தியரை அழைத்து வந்தார். அவர் வந்து கிளியை சோதனை செய்தார்.

அப்போது வைத்தியர் "இந்தக் கிளிக்குத் தொண்டையிலே ஒரு சின்ன அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும். அதைச் செய்தால் நோய் குணமாகிவிடும்" என்றார்.

"அறுவை சிகிச்சையா... ஐயோ! அது வேண்டாம்... எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றார் அந்தப் பெரியவர்.

அடுத்தநாள் ஒரு இயற்கை வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்து காட்டினார்.

"ஏதாவது மருந்து கொடுத்து இதைக் குணமாக்க முடியுமா?" என்று கேட்டார்.

அவர் பார்த்துவிட்டு "மருந்து கொடுத்து குணமாக்கலாம். ஆனால், சிறிது நாட்கள் செல்ல வேண்டும். படிப்படியாகத்தான் சரியாகும்!" என்றார்.

இன்னொரு சித்த வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்து காட்டினார். அவரும் அப்படியே சொன்னார்.

செய்வதறியாது பெரியவர் யோசனை செய்ய ஆரம்பித்தார்.

இப்படி இருந்த காலத்தில்... ஒருநாள் அந்தப் பெரியவருடைய நண்பர் அவரைப் பார்க்க வீட்டிற்கு வந்தார். வந்தவர் ஒரு மனநல மருத்துவர். அவரிடம் தனது கிளி பற்றிய விபரத்தைக் கூறினார்.

"இனிமேல் நீங்கள் இந்தக் கிளிக்குப் பக்கத்திலே நின்று கொண்டு புகைபிடிக்கக்கூடாது. நீங்கள் ஏற்படுத்துகிற சிகரெட்டின் புகைதான் இந்தக் கிளியின் இருமலுக்குக் காரணம்!" என்றார்.

அதன்பின் அந்தப் பெரியவர் கிளிக்கு அருகில் நின்று புகைப்பதில்லை.

அதன் பின்பும் கிளி இருமலை நிறுத்தவில்லை. தொடர்ந்து இருமிக் கொண்டே இருந்தது.

இவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஒருநாள் பார்த்து பாட்டி ஒருவர் இதுவருடைய் வீட்டிற்கு வந்தார். இந்தப் பாட்டி யாரென்றால் சிறிய வயதில் இவருக்கு பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொடுத்த ஆசிரியை.

அந்தப் பாட்டியிடம் விபரத்தை எடுத்தியம்பினார்.

உடனே பாட்டி, "இதோ பார்... இந்தக் கிளி இருமலை நிறுத்த வேண்டுமென்றால், அதற்கு ஒரேயொரு வழி செய்ய வேண்டும். நீ புகைபிடிக்கிற பழக்கத்தை நிறுத்த வேண்டும்" என்றார்.

ஆசிரியை வார்த்தையை மீற முடியுமா? அதனால் புகை பிடித்தலை நிறுத்தினார்.

இவருக்கு இருமல் நின்று விட்டது. அந்த நாளிலே கிளியின் இருமலும் நின்று போய்விட்டது.

பெரியவருக்கு ஆச்சரியம். திறமையான மருத்துவரினால் குணப்படுத்த முடியாத இந்த நோய் இப்போது எப்படி குணமாகியது?

உடனே புறப்பட்டு அந்த ஆசிரியை வீட்டுக்குப் போனார். விபரத்தைக் கூறினார்.

அந்த ஆசிரியை, "உன் கிளிக்கு நோய் எதுவும் கிடையாது. நீ இருமுவதைப் பார்த்து விட்டு உன்னைப் போல் இருமிக் காட்டியிருக்கிறது அவ்வளவு தான்" என்றார்.

நீ புகைபிடிக்கிறதை விட்டதும் உன்னுடைய இருமல் சத்தமும் நின்றது... அதனால் அது போடுகிற சத்தமும் நின்றது...

"இதிலிருந்து ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வழிகாட்டுவது மட்டும் முக்கியமில்லை. வாழ்ந்து காட்டுவதுதான் முக்கியமாகும். அதுதான் உன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக அமைக்கும்."

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பெண்கள் தங்களது உரிமைகளை பாதுகாக்க அரசியலில் ஈடுபடவேண்டும்

## பேராசிரியர் வி.சிவநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க அரசியலில் ஈடுபடுவதோடு கிராமங்களில் இயங்கி வரும் சங்கங்களிலும் தம்மை உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும் என யாழ்.பல்கலைக் கழக பொருளியல் துறைப்பேராசிரியர் வி.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை அதிகரிக்கும் நோக்குடன் யாழ். மாவட்ட அபிவிருத்தி நிலையம் அரசியல் கருத்தரங்கு ஒன்றை நேற்று இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொண்டு தேர்தல் பிரசார யுத்திகளை முன்னெடுக்கும்வழிமுறைகள்என்றதொனிப் பொருளில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல்வாதிகள் கிராம மட்டத்திலுள்ள மக்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி தேர்தல் காலங்களில் வெற்றி அடைகின்றனர்.

கிராமங்களில் உள்ள சங்கங்களின் ஊடாகவே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வாக்குகளைப் பெறுகின்றனர்.

அத்தகைய சங்கங்களில் பெண்கள் உறுப்பினர்களாக தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அத்தோடு தமது தேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்பதை பெண்கள் உணர வேண்டும்.

மேலும் தமது பலத்தை அதிகரிக்கவும் தேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளவும் அரசியலில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும்.

தீர்மானங்கள் எடுக்கப்படும் இடங்களில் பெண்களின் கருத்துக்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அந்த இடங்களில் பெண்கள் தமது உறுப்புரிமையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்கு பாராளுமன்றத்தின் உறுப்புரிமை மிக முக்கியம். பாராளுமன்றத்திலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றது.

பெண்கள் தமது உரிமைகளை பாதுகாக்க வேண்டுமானால் உரிமைகளை மறுப்பவர்களை எதிர்த்து கேள்வி எழுப்ப வேண்டும்.

சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் பெண்கள் முன்வர வேண்டும்.

பொது நிகழ்வுகளில் பெண்கள் தமது ஆளுமையை வெளிக்காட்டமுன்வர வேண்டும்.

மேற்குலக நாடுகளில் அந் நாடுகளின் வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் பங்காற்றுகின்றனர்.

நாட்டில் பெண்களுக்கான அரசியல் வெற்றிடங்கள் அதிகமாகவேயுள்ளது. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க இவர்கள் அரசியலில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். பெண்கள் அரசியலில் ஈடுபடுவதினால் ஆண்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அவர்கள் தமது உரிமைகளைப் பறிப்பதாக இதை கருத முடியாது.

எனவே, பெண்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்கவும் தேவைகளை நிறைவேற்றவும் அரசியலில் ஈடுபடுவது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (4-2-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 40 | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 20 | 25 |
| கோவா | 40 | 40 | 30 |
| கரட் | 80 | 70 | 50 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 65 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 45 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 80 | 50 |
| லீக்ஸ் | 40 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 40 |
| போஞ்சி | 70 | 120 | 90 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 25 |
| கீரை - 1 பிடி | 10-12 | 30 | 15 |
| தேசிக்காய் | 280 | 260 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*18.10.2011*
*(ஐப்பசி 01, செவ்வாய்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 4.24 மணிவரை*
*திருவாதிரை முழுவதும்*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், தொழில் முன்னேற்றம் ஏற்படும், உடன் பிறப்புகள் மூலம் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

**இடபம்** வருமானம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொது நல ஈடுபட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களால் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** அம்பிகை வழிபாட்டால் காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், இடமாற்றம், ஊர்மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு கிட்டும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**கன்னி** சுப செய்திகள் வந்து சேரும் நாள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும், பிறர் உதவியுண்டு, தூரதேசச் செய்திகளால் தொழில் வளர்ச்சிக்கு நன்மையுண்டு.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிலையுள்ளது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பிரயாணத்தில் விழிப்புணர்ச்சி தேவை.

**தனுசு** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட நண்பர்கள் மனம்மாறுவர், நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறலாம், வெளியூர் பயணங்களால் பணவரவை பெறுவீர்கள் தொழில் வளர்ச்சியுண்டு.

**மகரம்** கனிவான பேச்சுக்களால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், மறைமுக போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், வரவு திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வீட்டை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், செய்தொழிலால் மேன்மையுண்டு, பூர்வ புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்க நேரிடலாம், வாகன சுகமுண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள்.

வளவன்

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் கட்டாயக்கல்வி வரவுக்குழு பொறுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை தென்மராட்சி கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரவுக்குழுவுக்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரை ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தர்மராஜா சகல அதிபர்களையும் கேட்டுள்ளார். (4-3-29)

## பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வரக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் சங்கத் தலைவர் வே.விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் காப்பாளருள் ஒருவரான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அமரத்துவம் அடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டமாகும்.

இதனால் இப்பொதுக்கூட்டத்தில் பேராசிரியர் பற்றிய விசேட நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது. (4-3-24)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிர்மாண வேலை பூர்த்தியாகும் நிலையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கான விடுதிக் கட்டடம் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

இக்கட்டட வேலைகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் இந்த விடுதியில் தங்கவுள்ளனர்.

நவீன வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கட்டட வேலைகள் ஒரு வாரத்தில் முடிவுறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3-29)

## நீண்டகாலமாக நிர்வாகத் தெரிவு இன்றி இருக்கும் சனசமூக நிலையம்

(உடுப்பிட்டி)

வல்லைவீதி தொண்டைமானாறு கலைமகள் சனசமூக நிலையம் இரண்டு வருடங்களாக இயங்காத நிலையில் உள்ளது.

முன்னர் இச்சனசமூக நிலையம் இராணுவ காவலரணாக செயற்பட்டு வந்து கடந்த 5 மாதத்திற்கு முன்னர் இராணுவ காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

எனவே இச்சனசமூக நிலையம் இயங்குவதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை.

இதனால் மக்கள் இச் சனசமூக நிலையத்தின் சேவையை பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அப்பகுதி நலன்விரும்பிகள் இதனைக் கருத்திற் கொண்டு சனசமூக நிலையம் இயங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-52)




## போட்டிகள்

(கரவெட்டி)

வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 3 மைதானங்களில் இரு பிரிவினருக்கான போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இதில் 16 மற்றும் 18 வயதுக்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4-3-24)

## முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தால் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை சிறுவர்,முதியோர் தினவிழா மன்றத் தலைவர் ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்தோடு மன்ற முன்னாள் தலைவர்கள் நவநீதம் ஜெகதீசன், கோணையா தியாகராசா ஆகியோர் கௌரவிக்கப்படுவதுடன் கழகங்களிலிருந்து 52சிறுவர்களும் 52 முதியவர்களும் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ள னர். (4)

## மட்டுவில் வடக்கு பிலிப் வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு பிலிப் வீதி 25 வருடங்களாக புனரமைக்கப்படாதுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஒன்றரை கிலோமீற்றர் நீளமான இவ் வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பயணத்தை மேற்கொள்ள முடியாத அவலநிலை உள்ளது.

அண்மித்து வரும் பருவகால மழைக்கு முன்னர் இவ்வீதியை புனரமைப்பதன் மூலமே விபத்துக்களை குறைக்க முடியும்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்து மக்கள் போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-29)

## 23 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைப்பு

(கரவெட்டி)

என்றிப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 23 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிதியில் நவீன ஒன்று கூடல் மண்டபமும் ஆறுவகுப்பறைகளும் அமைக்கப்படும் கட்டட நிர்மாணப் பணி நடைபெற்ற வருகின்றது.

இப் பாடசாலையில் கட்டட வசதிகள் பற்றாக்குறை நிலவிய வேளையில் அதை அமைப்பதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதனால் எமது பாடசாலை சமூகத்திற்கு பெரும் நன்மை கிடைத்துள்ளது என பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செம்மலர் சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (4-3-24)

## வரணி அம்மா கடைவீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

நெல்சிப் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வரணி அம்மா கடைவீதி புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்படாது உள்ளமையால் மக்கள் விசனமடைந்துள்ளனர்.

இப்புனரமைப்பு வேலைகளுக்காக கற்கள் பறிக்கப்பட்டும் மக்கள் பங்களிப்புக்கான வீதி துப்பரவு வேலைகள் முடிவுற்ற நிலையிலும் வீதியானது புனரமைக்கப்படாது உள்ளது.

இதனால் அவ்வீதியூடாக பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் பருவகால மழைக்கு முன்னர் இவ்வீதிவேலைகளை பூர்த்தி செய்து உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-29)

## சிவசோத்மன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி மகேசன் விளையாட்டு கழகத்தின் முன்னாள் வீரர் அமரர் சிவசோத்மன் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் அரைஇறுதி ஆட்டங்களுக்கு நான்கு அணிகள் தெரிவாகியுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு பிரிவுகளாக இரு மைதானங்களில் கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது.

இதில் ஏ பிரிவின்ருக்கான போட்டி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும் பி பிரிவினருக்கான போட்டி கரணவாய் பொலின்ஸ் விளையாட்டு கழக மைதானத்திலும் நடைபெற்றது.

இதில் ஏ பிரிவில் சாவகச்சேரி சிவன் அணியும் கரவெட்டி ஐங்கரா அணியும் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

பி பிரிவில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் குரும்பசிட்டி உதயசூரியன் அணியும் தெரிவாகியுள்ளன. (4-3-29)







யாழ்.அன்பொளி கல்வி நிறுவனத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவன முகாமையாளர் வே.அன்பழகன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி எல்.மகேஸ்வரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த இரு நபர்கள் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக் நீதிவான் அ.பிறேமசங்கர் குறித்த நபர்கள் மற்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 5 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கியதுடன் மற்றயவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

(கிளிநொச்சி)

மதுபோதையிலும சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், வருமான வரிப்பத்திரம் ஆகியவை இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 14 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

மதுபோதையிலும் கடுமையான வேகத்திலும் முச்சக்கரவண்டியை செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதுடன் ஒரு மாதகாலத்திற்கு தற்காலிகமாக சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இரத்துச் செய்தார்.

---

198 போத்தல் கோடாவையும் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கான உபகரணங்களையும் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார், வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 2 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 16 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

5 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கியதுடன் 2 மாத கட்டாய சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3-24)

---

120 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் முழங்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

(சாவகச்சேரி)

மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் முறையில் வாகனம் ஓட்டிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3-29)

# தேச வழமைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கிற்கு தனித்துவமாக அமுலிலிருக்கும் பயங்கரவாத கொள்கைகளுக்குத் துணை போகும் தேச வழமைச்சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும். வடக்கில் மாவீரர் குடும்பங்கள் ஆக்கிரமித்துள்ள காணிகளையும் அரசாங்கம் காலதாமதமின்றி சுவீகரிக்க வேண்டும் என்று அமைச்சரும் ஜாதிக ஹெல ஊறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வடக்கில் 40 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். இவர்களின் காணிகளை புலிகளே சுவீகரித்தனர். கூட்டமைப்பினர் வீண் பிரச்சினைகளை தூண்டிவிட முயற்சிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில், தேசிய சட்ட கோவையின் பிரகாரம் அனைவருக்கும் சமமாக சட்டங்கள் அமுலாக்கப்பட வேண் டும். ஒரு தனி இனத்திற்கோ அல்லது பிரதேசத்திற்கோ தனித்துவமான சட்டங்கள் காணப்பட முடியாது. வெள்ளையர்கள் ஆட்சியில் பிரிவினை வாதத்திற்கும் பயங்கரவாதத்திற்குமான சட்ட ஆதாரமாக தேச வழமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை இன்று நடைமுறையில் வைத்துக் கொள்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

புலிகள் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் காணிகளை திட்டமிட்டு சூறையாடினார்கள். இவர்களின் காணிகளில் மாவீரர் குடும்பங்களை புலிகள் தங்க வைத்தனர்.

எனவே, அரசாங்கம் உரிய முறையிலான மீள் காணிப் பதிவுகளை மேற்கொண்டு சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும். அதற்கு முன்னர் வடக்கிற்கு தனித்துவமாக உள்ள தேச வழமைச் சட்டத்தை தேசிய சட்டக் கோவையிலிருந்து உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.

இச் சட்டமானது பிரிவினை வாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் துணை போகும் இனவாத சட்டமாகும். இவ்வாறான சட்டங்களை அரசியலமைப்பிற்குள் அனுமதிக்கக்கூடாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முட்டாள் தனமாக சிந்தித்து நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடாது.

தெற்கிற்கும் அதேபோன்று தனத்துவமான சட்டங்கள் கொண்டு வரப்படுமேயானால் இங்கு வாழும் தமிழர்களும் வெளியேற்றப்பட வேண்டும்.

எனவே, எவ்வகையிலும் தேச வழமைச் சட்டம் நாட்டிற்கு ஒவ்வாது. அனைத்து இன மக்களுக்கும் நாட்டின் எப் பிரதேசத்திலும் வாழக் கூடிய சுதந்திரம் ஒரு சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார். (4-2)

# புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினால் 2010/ 2011 கல்வியாண்டுக்கு புதிய மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் கலை, வர்த்தகம், சங்கீதம் மற்றும் நடன கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (4-12)



# இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும் போதுதான் மீண்டுமொரு யுத்தகாலம் ஏற்படாது

## இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி தெரிவிப்பு

(கொழும்பு) —

**இலங்கைக்கு அரசியல் மற்றும் சமூகஸ்திரத்தன்மையை நோக்கி பய ணிக்க வேண்டும். அப்போது தான் 30 வருடகால யுத்தத்தை போன்ற காலக்கட்டம் ஏற்படவாய்ப்பிருக்காது. யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பில் என்ன செய்ய வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும் எனவும் அதனைத் தீர்மானிப்பதற்கான உரிமை வேறு எந்தவொரு நாட்டிற்கும் இல்லை என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி தெரிவிக்கின்றார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில். அண்மையில் இடம்பெற்றநேர்கா ணலின் போது கனேடிய உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களின் பின்னர் இதுவரை இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலான நிலைப்பாடு குறித்தும் கனேடிய உயர்ஸ்தானிகர் தெளிவுபடுத்தினார்.

இலங்கை அரசாங்கம் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது என தாம் எண்ணுவதாகவும் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அளவில் பதவியை பொறுப்பேற்று தாம் இலங்கை வந்தபோது மெனிக்பாம் மற்றும் ஏனைய இடங்களில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த சுமார் மூன்று இலட்சம் மக்கள் மீதே அதிக கவனம் செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகம் இலங்கையும் 2010 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்தவர்களில் 80 முதல் 90 வீதமானோரே மீள்குடியேற்றியமை தொடர்பில் தாம் ஆச்சரியமடைந்ததாக புரூஸ் லெவி சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் முன்னேற்றம் ஏற்படாதவிடத்து இங்கு நடைபெற்ற அரச தலைவர்கள் மாநாட்டிற்கு சமுகமளிக்க முடியாது என கனேடிய பிரதமர் டொரன்டோவில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமை குறித்தும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் வினவப்பட்டது.

நன்மையாயினும்தீமையாயினும்இலங்கை மீது பாரிய சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் செய்திகள் வெளியாகியதாக சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதன் காரணமாக மக்களின் மனங்களில் இவ்வாறு இடம் பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது என்பதே பிரச்சினைக்குரிய விடயமாகும் என கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

· இதனாலேயே விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் மேலும் கூறினார்.

(4-2)

## 18 ஆவது ஆண்டு நிறைவு விழா

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 18 ஆவது ஆண்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரியின் பலநோக்கு மண படத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பொது வைத்தியசாலை சுகாதார அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ரி. சத்தியமூர்த்தி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு அன்றைய தினம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆண்டு சஞ்சிகையான வித்தியா தீபம் மலர் வெளியீடும் வவுனியாவில் அதிபர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஐந்து ஓய்வு பெற்ற அதிபர்களும் கௌரவிக்கப்ப டவுள்ளதாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் தெரிவித்துள்ளார்.

(4-12)

# சர்வதேச மொழி அபிவிருத்தி மாநாட்டில் 15 நாடுகள் பங்கேற்பு

(கொழும்பு)

இலங்கை -இந்தியா உள்ளிட்ட 15 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மொழி அபிவிருத்தி மாநாடு நேற்று கொழும்பில் கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்ததாக் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பமான இம் மாநாடு நாளை புதன்கிழமை வரை நடைபெறும். இது மொழியும் சமூகப் பிணைப்பும் எனும் தொனிப் பொருளில் நடைபெறவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை நடத்தப்படும் இந்த சர்வதேச மாநாட்டின் 9 ஆவது கருத்தரங்கு இம்முறை இலங்கையில் நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ்; தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, தீமோர் லெஸ்ரே, பிலிப்பைன்ஸ், ருவண்டா, திஜிபொதி, கெமரூன், தன்ஷானியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் பங்குகொள்ளும் நாடுகள் மொழியின் பங்களிப்பு மற்றும் மொழிப் பயன்பாடு தொடர்பில் தமது நாடுகளில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்.

மொழியின் ஊடாக சமூகப் பிண்ணப் பொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஜீ.ஜ.சட் ஆகியன இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன.

இலங்கையில் அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கும் சூழ்நிலையில் மொழிகள் மூலம் இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருக்கும் இத்தருணத்தில் இவ்வாறானதொரு மாநாடு இலங்கையில் நடைபெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் குறிப் பிட்டுள்ளார்.

(4-2)

# வரவு- செலவுத் திட்டத்தில் விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்

## விரிவுரையாளர் சங்கம் கோரிக்கை



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டங்கள் இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென்று பல்கலைக்கழக விரிவுரையாளர்களது சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

தற்போது விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை தற்காலிகமானது எனவும் விரிவுரையாளர் மஹிம் மென்டிஸ் தெரிவிக்கிறார்.

இம்முறை வரவு-செலவுத்திட்டத்திலும் விரிவுரையாளர்களுக்கான உரிய தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்படாவிடில் பல்கலைக்கழகத்தினுள் மீண்டும் பிரச்சினைகள் பாரிய அளவில் தலைதூக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

(4-2)

# இந்திய நிதியுதவித் திட்டத்தின் கீழ் 50 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன

## கிளி.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய நிதியுடவியுடன் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளில் மேலும் 50 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த வீடுகளை மழைக்காலத்துக்கு முன்னர் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்குக்குச் சென்றிருந்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மாத்தாய் இவ்வீடுகளை பார்வையிட்டு சென்றதாகவும் குறிப்பிட்டார்.

இந்திய நிதியுதவியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 250 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் பளை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(4-2)

# மீள் குடியேற்றம் பூர்த்தியான பின்னரே புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றில் தேர்தல்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

தற்போது தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டுக்கான வேட்பு மனு தாக்கல் இரத்து செய்ய உள்ளூராட்சி மன்ற அமைச்சு நடவடிக்கைகள்மேற்கொண்டுள்ளது.

இந்த தகவலை தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ளார்.

குறித்த மாவட்டத்தில் தேர்தலுக்காக தாக்கல் செய்துள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்யுமாறு உள்ளூராட்சி மன்ற அமைச்சு தமக்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்[illegible]லயில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்[illegible]மாறு அ[illegible]மச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் [illegible]தல்க[illegible] ஆணையாளர் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிர்வாகக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடை கின்றன.

எனினும் இந்த இரண்டு உள்ளூராட்சி சபை தேர்தல்களிலும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமை மற்றும் மீள் குடியேற்றம் பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்களுக்காக மூன்று முறை தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

இந்த இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்பு மனுக்கள் நாடாளுமன்ற சட்டத்தின் கீழேயே இரத்து செய்ய முடியும்.

இந்த நிலையில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தேர்[illegible]ல் ஆணையாளருக்கு அறிவித்துள்[illegible]து.

(4-2)

# பெரும்பாலான மருந்தகங்கள் மருந்தாளர் இல்லாது இயங்குகின்றன

## ஔடத சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பெரும்பாலான மருந்தகங்களில் மருந்தாளர்கள் இல்லையென இலங்கை ஔடத சங்கம் தெரிவிக்கின்றது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை ஔடத வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா இந்த விடயம் குறித்து சுட்டிக்காட்டினார்.

சுகாதார சேவையில் மருந்தாளர்கள் மிக முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர் சில மருந்தகங்களில் மருந்தாளர்கள் இல்லாத பிரச்சினை நிலவுவதாக குறிப்பிட்டார்.

மருந்தகங்களில் மருந்தாளர்கள் இன்மையானது பாரிய பிரச்சினையாகும் எனக் கூறிய இலங்கை ஔடத சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் இது குறித்து நோயாளர்களைத் தெளிவுபடுத்துவது சிறந்த நடைமுறையாகும் என தெரிவித்தார்.

மருந்து வாங்குவது என்பது கடைகளில் பொருள் கொள்வனவு செய்வதைப் போன்றதல்ல எனக் குறிப்பிட்ட அவர் இதன்மூலம் உயிராபத்து ஏற்படலாம் எனவும் கூறினார்.

மருந்தாளர்கள் இல்லாத மருந்தகங்களில் மருந்து கொள்வனவு செய்யக்கூடாது என்பது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த வேண்டியுள்ளதாக பேராசிரியர் மேலும் குறிப்பிட்டார்.

(4-2)

# பாரிய மனிதப் படுகொலைகளை அரசாங்கம் செய்ததாக சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர்

## அரசியல் இலாபத்திற்காகவே இவ்வாறு கூறுகின்றனர் என்கிறார் பசில்



**வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை செய்ய முற்படும் போது சர்வதேச நாடுகள் நிதி வழங்குவதிலிருந்து விலகிக் கொள்ளும் நிலை காணப்படுவதாகவும் இவ்வாறு நிதியினை நிறுத்துவதற்கு சில அரச அதிகாரிகளும் துணைபோயுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மக்கள் வங்கி பொன்விழா வீடமைப்புத் திட்டத்தின் 50 வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த தடைகள் வந்த போதும் வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட அம் முஸ்லிம் மக்களை அவர்களது தாயக பூமியில் மீள்குடியேற்றி அவர்களுக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் நாம் செய்து கொடுப்போம். அதற்கெதிராக செயற்படும் அனைத்து சக்திகளையும் வலுவிழக்கச் செய்வோம் என்றும் கூறினார்.

வடக்கில் கடந்த 30 வருடங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அழிக்கப்பட்டு மீண்டும் அமைதிச் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று மக்கள் அச்சமற்ற சூழலில் வாழ்கின்றனர். அன்று பயங்கரவாதிகளினால் அழிக்கப்பட்டவற்றை இன்று அதை விட பாரிய மாற்றங்களுடன் நவீன காலத்தின் தேவைக்கேற்ப கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே.

இவ்வாறு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட எமது படையினர் தமது உயிர்களை இந்த மண்ணுக்கு உரமாக இட்டு மண்ணை மீட்டு மக்களது இயல்பு வாழ்க்கையினை ஏற்படுத்த ஆற்றிய பணிகள் மறக்க முடியாததொன்றாகும். தமது சொற்பமான தேவைகளை அடைந்து கொள்வதற்காக சில சக்திகள் அதனை மழுங்கடிக்க முற்படுகின்றனர். அதனை காரணம் காட்டி வடக்கில் பாரிய மனித படுகொலைகளை இந்த அரசு செய்ததாக பிழையான தகவல்களை சர்வதேச இணையங்களுக்கு சில அரசியல் வாதிகள் வழங்கி வருகின்றனர். வன்னியில் வாழ்ந்த மக்கள் எண்ணிக்கையினைப் பார்க்கிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக பொய் தகவல்களை கூறுபவர்களுக்கு எம்மிடம் சரியான தகவல் கோவை இருக்கின்றது. பாடசாலையில் கற்றவர்கள் முதல் வாழ்ந்து உயிர் நீத்தவர்கள் வரை சரியான எண்ணிக்கையுண்டு என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

பயங்கரவாதிகளிடமிருந்து வடக்கை அரச படைகள் கைப்பற்றியது முதல் எந்தவொரு குடிமகனும் பட்டினியால் கூட மரணிப்பதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களது பாதுகாப்பை எமது அரசும் படையினரும் உறுதி செய்துள்ளனர். விடுதலைப் புலிகளின் நெருக்கத்தை கொண்ட சில சக்திகள் இன்றும் அந்த செயற்பாட்டு எண்ணத்தை கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது. அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் ஆட்சியில் இருக்கும் வரை ஒரு போதும் மீண்டும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் தழைத்தோங்க இடமளிக்க மாட்டோம். வடக்கில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்க்கப்பட்டு எங்கு சென்றிருந்தாலும் அவர்கள் அவர்களது தாயக மண்ணில் மீள்குடியேறுவதில் எந்த பிரச்சினையும் இல்லை. அதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும். அதேபோன்றுதான் அரச அதிகாரிகளும் இவ்வாறு செயற்பட வேண்டும்.

எம்மிடம் இனவாதம் இல்லை. அதனால் தான் நாம் வடக்கையும் வடக்கு மக்களையும் நேசிக்கின்றோம். ஆனால் வடக்கில் உள்ள சில அதிகாரிகள் இன்னும் குறுகிய இனவாத சிந்தனைக்கு துணைபோய் மக்களை குழப்பி மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தளத்தை ஏற்படுத்தலாம் என நினைக்கின்றனர். அதனை ஒரு போதும் ஏற்படுத்த நாம் இடம் கொடுக்க மாட்டோம்.

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் 48 மணித்தியாலங்களில் புலிகளினால் துரத்தப்பட்டனர். அவர்கள் வெளியேற்றப்படும் போது 2 சொப்பின் உறைகளை தான் கொண்டு சென்றனர். இன்றும் அவர்கள் புத்தளம் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

இவர்கள் தமது மண்ணில் வந்து வாழ வேண்டும் என்பதில் எந்த சந்தேகமில்லை. அவர்கள் கௌரவமாக வந்து வாழ தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மிகவும் அவசரமாக அரசாங்கம் செய்து கொடுக்கும் என்பதை உறுதியாக கூறிக் கொள்கின்றேன். இதனை அரசாங்க அதிகாரிகள் புரிந்து கொண்டு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என்ற பார்வைக்கு அப்பால் செயற்பட வேண்டும்.

இலங்கை தேசத்தில் எப்பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்த போதிலும் அவர்கள் விரும்பிய பிரதேசங்களில் சுதந்திரமாக வாழக் கூடிய நிலையை இன்று நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். மடு திருத்தலத்தை மிகவும் குறுகிய காலத்திற்குள் பெரும் நிதிச் செலவில் புனரமைப்புச் செய்துள்ளோம். அதே போன்று மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவிலை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்காக இந்திய நாட்டின் பொறியியலாளர்கள் வருகை தரவுள்ளனர் என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (4)

## தீபாவளியை முன்னிட்டு 350 முன்னாள் போராளிகளை விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)



தீபாவளியை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட 350 முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவிருப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம் எஸ். சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கையின் போது பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் 11 ஆயிரத்து 699 பேரில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடுத்த கட்டமாக 350 பேர் தீபாவளி தினத்தன்று விடுவிக்கப்படவுள்ளனர். அன்றையதினம் அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வை கொழும்பில் நடத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)




வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் இலக்கியப் பெருவிழா மன்னார் நகரசபைமண்டபத்தில் கடந்த 14, 15ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் வரவேற்பு நடனம் மற்றும் ஊர்திப்பவனி இடம் பெறுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆளுநர் விருளது வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: என்.குமார்,பூநகரிச் செய்தியாளர்)

## விசமான உணவு

### பகுப்பாய்விற்கு

தலவாக்கலை பிரதேச சிறார்களுக்காக நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெரியவர்கள் மற்றும் சிறார்களுக்கு வழங்கப்பட்ட உணவு விசமான சம்பவம் தொடர்பில் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அரசசார்பற்ற நிறுவனத்தின் அதிகாரிகள் இருவர், நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு உணவு பரிமாறியவர் மற்றும் இரண்டு பாடசாலை அதிபர்கள் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது பரிமாற்றப்பட்ட உணவின் மாதிரி அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு தற்சமயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனிடையே பொது மக்கள் சுகாதார பிரிவு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தலவாக்கலை பிரதேசத்தின் மூன்று பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு விசமானதால் 580 பேர் வரையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 200 பேர் வரையில் சிகிச்சை பெற்று தற்சமயம் வெளியேறியுள்ளதாக வைத்தியசாலை தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனையவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (4-2)

# அவுஸ்.கான இலங்கை உயர்ஸ்தானிகர் திரேச சமரசிங்கவை விசாரியுங்கள்

## அவுஸ்.பொலிஸாருக்கு மனு அனுப்பப்பட்டிருப்பதாக த ஏஜ் பத்திரிகை தெரிவிப்பு

**அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகரான முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் திரேச சமரசிங்கவை போர்க்குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டுமென அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிசாரிடம் கோரப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் தி ஏஜ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**



சட்ட வல்லுநர் சர்வதேச ஆணைக்குழுவின் அவுஸ்திரேலிய பிரிவினால் அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸாருக்கு இக்கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது. பொதுநலவாய வழக்குத் தொடுப்பு பணிப்பாளர், அவுஸ்திரேலிய பிரதமர் அலுவலகம், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றுக்கும் இம்மனு அனுப்பப்பட்டுள்ளதாக தி ஏஜ் தெரிவித்துள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கான நேரடி மற்றும் நம்பகத்தகுந்த ஆதாரங்கள் என வட்டாரமொன்று தி ஏஜ் பத்திரிகைக்கு தெரிவித்த தொகுப்பொன்றும் இம் மனுவில் இருப்பதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தி ஏஜ் பத்திரிகை செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பிரிவினைவாத பயங்கரவாத குழுவான தமிழ் புலிகளுடனான யுத்தத்தின் இறுதி வருடங்களில் அட்மிரல் சமரசிங்க இலங்கை கடற்படையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் தளபதியாகவும் கடற்படை அதிகாரிகளின் பிரதானியாகவும் விளங்கினார்.

ஐ.நா. கூறுவதன் படி கடந்த 2009 இல் யுத்தத்தின் கடைசி மாதங்களில் கிளர்ச்சி படையினருக்கு எதிராக அரசாங்கப் படைகள் முன்னேறிய போது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் சிக்கிக் கொண்ட 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

மோதல்களிலிருந்து தப்பிச் சென்ற நிராயுதபாணிகளாக பொதுமக்கள் மீது கடற்படைக் கப்பல்கள் நேரடியாக பிரயோகம் நடத்தியதாக சட்டவல்லுநர் ஆணைக்குழு விடமும் ஏனைய விசாரணையாளர்களிடமும் தனித் தனியாக சுயாதீனமான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

அட்மிரல் சமரசிங்க இந்த ஷெல் வீச்சுகளில் நேரடியாக பங்குபற்றியமைக்கோ அல்லது அப்படி செய்வதற்கான நேரடி உத்தரவு பிறப்பித்தமைக்கோ ஆதாரம் இல்லை. ஆனால் படை உயரதிகாரிகள் தமது கீழுள்ளவர்களின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பொறுப்புதாரிகள் என அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸாருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸார் இந்த மனுவை ஆராய்ந்து வருவதாகவும் எனவே இப்போது கருத்து தெரிவிப்பது பொருத்தமற்றது எனவும் அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸ் பேச்சாளர் ஒருவர் த ஏஜ்ஜுக்கு தெரிவித்துள்ளார்.

அட்மிரல் சமரசிங்க த ஏஜ்ஜுக்கு இது குறித்து கூறுகையில்,

யுத்தத்தின் போதான தனதும் தனது கடற்படையினதும் நடவடிக்கைகளை சட்டபூர்வமானவை எனக் கூறினார். தவறான நடத்தை அல்லது சட்டவிரோத நடவடிக்கை குறித்த எந்த குற்றச்சாட்டிலும் உண்மையில்லை என அவர் கூறினார்.

சட்ட வல்லுநர்களின் சர்வதேச ஆணைக்குழுவானது ஜெனிவாவை தளமாகக் கொண்ட ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பாகும். யுனெஸ்கோ, ஐரோப்பிய குழு மற்றும் ஆபிரிக்க ஒன்றியம் ஆகியவற்றுக்கு ஆலோசனை கூறும் அந்தஸ்தை அது கொண்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

# தேர்தல் கால வாக்குறுதிகளை ஐ.தே.க.நிறைவேற்ற வேண்டும்

## இயலாது என்றால் நான் பொறுப்பேற்கிறேன் என்றார் சஜித்

(கொழும்பு)



கொழும்பு மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பதாக வழங்கிய வாக்குறுதியை ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்ற வேண்டும் என கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நவகம்புர ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது மக்கள் அதனை நிராகரித்ததாக அவர் குறிப்பிட்டார்.

65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வாக்குறுதி அளித்ததாக குறிப்பிட்ட அவர் அதனை ஏற்றுக் கொண்டு கொழும்பு மாநகர மக்கள் கட்சியை வெற்றி பெறச் செய்ததாக குறிப்பிட்டார்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருப்பதால் வாக்குறுதியளித்த 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டியது கட்சியின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வீடுகளை கட்டுவதற்கு இயலாமை இருந்தால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள பிரேமதாசவின் மகன் தயார் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். இதன்போது நவகம்புர ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அவர் நிதியுதவியும் வழங்கினார். (4-2)

# நாட்டில் மனித உரிமைக்கு மதிப்பில்லை ஊழல் மோசடிகளே அதிகரித்துள்ளன

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)



இலங்கையில் தற்போது மனித உரிமைகளுக்கு மதிப்பில்லை. ஊழல் மோசடிகளே அதிகமாக காணப்படுகின்றன. பொலிஸ்துறை செயலிழந்துள்ளது.

பொலிஸ்மா அதிபரால் தனது உத்தியோகத்தர்களை நிர்வகிக்க முடியாத நிலை இருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

பொலிஸாரும் பொதுமக்களும் மோதிக் கொள்கிறார்கள். இரு தரப்பினரும் தாக்கப்படுகிறார்கள்.

இதனால் இரு தரப்பினருக்குமே உயிரிழப்பு ஏற்பட்டுகின்றது. கட்டுநாயக்க, தொம்பே சம்பவங்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.

அது மட்டுமல்ல அரசாங்கத்துக்குள்ளேயே பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களே மற்றவர்களுக்கு எதிராக சண்டையிடுகின்றார்கள்.

இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது நாட்டில் சட்டமும் ஜனநாயகமும் சரியாக இருப்பதாக வெளியில் பேசுகிறார்கள். இது எந்த வகையில் உண்மை என எனக்குத் தெரியாது.


சட்டத்துறை சரியாக இயங்கினால் இன்று இந்தளவு பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை. அதனை அரச தரப்பினர் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (4-2)





தென்மாராட்சி பிரதேச செயலகத்தினரின் ஏற்பாட்டில் முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி வர்த்தக கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) முதியவர் ஒருவரை கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 07

## கோபம்

கோபம் கொள்வது சக்தியான விடயம் என்று பெரும்பாலானோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கோபம் கொள்ளும்போது, அது உங்கள் உயிருக்கு இதமாக இருக்கிறதா, அல்லது பாதிப்பபாக இருக்கிறதா? கவனித்துப்பார்த்தால், நிச்சயமாக பாதிப்பாகத்தான் இருக்கிறது. கோபப்படும்போது உங்கள் உடல், மனம், உயிர்த் தன்மை எல்லாமே பாதிப்புக்குள்ளாகிறது. யார் தனக்குத்தானே பாதிப்பை உருவாக்குகிறாரோ அவர் புத்திசாலியல்ல. ஒரு நாளில் எத்தனை முறை நீங்கள் கோபப் படுகிறீர்கள்? கவனித்துப்பாருங்கள். "இல்லை, கோபப்பட வேண்டும் என்பது எனது விருப்பமில்லை.



ஆனால், என் வீட்டில் இப்படியிருக்கிறார்கள், அலுவலகத்தில் அப்படியிருக்கிறார்கள், சூழ்நிலை அப்படியிருக்கிறது," இப்படி பலவிதமான காரணங்கள்.

வெளிச் சூழ்நிலையில் பல விதமான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். வெளிச்சூழ் நிலையில் நமக்கு எதிர்மறையாக ஏதேனும் பிரச்சினைகள் வரும்போது, உங்கள் உள்சூழ்நிலையையும் உங்களுக்கு எதிர்மறையாக ஆக்கிக் கொள்கிறீர்கள். வெளிச்சூழ் நிலை எமக்கு எதிராக நடக்கும் போது நம் உடலும் மனமும், உயிர்ச் சக்தியும் நாம் நினைத்த விதமாக நடப்பது மிகமிக இன்றியமையாதது. ஆனால், தற்போது வெளிச் சூழ்நிலையில் ஏதேனும் எதிர்மறையாக நடந்தால், உங்கள் உள் சூழ் நிலையையும் எதிர் மறையா ஆக்கிக் கொள்கிறீர்கள். கோபம் என்பது இதுதான்.

கோபப்படவில்லை யென்றால் சிலர் புரிந்து கொள்ள மாட்டார்களே, என்ன செய்வது? என்று நீங்கள் கேட்கலாம். கோபப்படுவதால் யாரும் எதையும் புரிந்து கொள்ளப் போவதில்லை. உலகில் பலவிதமான மக்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கு, இப்படிப் பார்த்தாலே எதற்காக அப்படிப், பார்க்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுகிறார். இன்னொருவருக்கு இப்படிப்பார்த்தால், மட்டும் புரியாது, என்ன விடயம் என்பதைச் சொல்லவேண்டும். இன்னும் சிலருக்கு மெதுவாகச் சொன்னால் புரியாது, சத்தமாகச் சொல்ல வேண்டும். இன்னும் சிலருக்கு அடித்துச் சொன்னால்தான் புரியும். இப்படி பலவிதமான மக்கள் உலகில் இருக்கிறார்கள். எந்த விதமான சூழலில், எந்த விதமான மக்கள் இருக்கிறார்களோ அந்த விதமாகத்தான் செயற்பட வேண்டும். நீங்கள் கோபப்படத் தேவையில்லை. சூழ்நிலைக்கு எப்படித்தேவையோ அப்படி செயற்பட வேண்டும். ரோட்டில் எருமை போகிறது. அதனிடம் போய் மென்மையாக, "ஓரமாகப் போ" என்றால், அது போகாது. "ஹேய்..." என்றுஅன் முதுகில் தட்டினால், போய் விடும். அதற்குப் புரியும் விதமாக நீங்கள் செயற்பட வேண்டும்.

இதுபோன்ற மனிதர்கள் உங்களைச் சுற்றியிருந்தால் எப்போதுமே சத்தம் போடும் தேவை உங்களுக்கு இருக்கிறது. ஆனால், சத்தம் போட்டாலும் ஆனந்தமாகச் சத்தம் போடலாமே! கோபமாய் சத்தம் போட அவசியமில்லை.

கோபம் ஏன் வருகிறது என்றால், உங்கள் உள் நிலையைப்பற்றி உங்களுக்கு எந்த அறிவும், கட்டுப்பாடும் இல்லாத ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கி விட்டீர்கள். வெளிச் சூழ் நிலை ஒருபோதும் 100% நம் கட்டுப்பாட்டில் இருக்காது. ஓரளவுக்குத்தான் வெளிச் சூழ்நிலைமீது கட்டுப்பாடு வைக்க முடியும். ஆனால், உள்ச் சூழ்நிலையையாவது நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாமே! வெளிச் சூழ் நிலையை இன்னொருவர் நிர்ணயித்தால், அது அடிமைத்தம். ஆனால், இப்போது நம் உள்ச் சூழ் நிலையை வெளியில் இருப்பவர்கள் நிர்ணயிக்கிறார்கள். இது மிகமிக மோசமான அடிமைத்தனம். உங்கள் மனம், உங்கள் உடல், உங்கள் உயிர்ச் சக்தி இவை எதுவும் நீங்கள் நினைத்த விதமாக நடக்கவில்லை என்பது மிக ஆழமான அடிமைத் தனம். பெரும்பாலான மக்கள் இத்தகைய அடிமைத்தனத்தில் சிக்கிப்போயிருக்கிறார்கள். அந்த அடிமைத்தனத்திற்கு பல விதமான தத்துவங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். உங்கள் கோபத்திற்கு வெளிச் சூழ்நிலை காரணமில்லை. உங்கள் உள்ச் சூழ்நிலை பற்றி உங்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை யென்பதே இதன் காரணம். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# பண்டைய இலக்கியமும் ஈழத்தமிழரின் சமகால வாழ்க்கையும்

02

ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு இனக்குழுமத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இனக்குழுமத்திற்குமென சில வாழ்வியல் நெறிகளும் கடைப் படுகின்றன. அவைதான் கலாசாரமும் பண்பாடும். கலாசாரமும் பண்பாடும் ஆங்கிலத்தில் Culture என்ற ஒற்றை வார்த்தையில் அர்த்தப்படுத்தப்படுகின்றன. கலாசாரம் என்பது பண்டைய காலம் தொட்டு நம் முன்னோர்களால் வாழையடி வாழையாக வழக்கில் இருந்து வரும் நிகழ்வுகளாகும். இவை உணவுப்பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், வழிபாட்டு முறைகள், பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சடங்குகள் போன்றவையாகும். சில இனக் குழுமங்களின் கலாசாரம் என்பது பிற குழுமங்களால் மூட நம்பிக்கைகளாகவும் பார்க்கப்படுகின்றன.

ஆனால், பண்பாடு எனும் வார்த்தை "பண்படுத்தல்" (refine- நேர்த்தியாக்குதல்) என்ற மூலச் சொல்லிலிருந்து வருகிறது. கலாச்சாரம் என்பது வழிவழியாக முன்னோர் செய்த விவசாயத்தை நாமும் அப்படியே பின் பற்றுவது போன்றதாகும். ஆனால், பண்பாடு என்பது களர் நிலத்தை விளை நிலமாக்குதல் (பண்படுத்தப்பட்ட நிலம்) போன்றதாகும்.

ஒரு காலத்தில் பலதார மணம் என்பது கலாசாரமாக இருந்தது. பலவாறான பண்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட இன்றைய நாகரிக வளர்ச்சி பெற்ற சமுதாயம், முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது, அல்லது அவரது சம்மதமின்றியோ மறுமணம் முடித்தலை தடை செய்துள்ளது. இதுவே பண்பாடாகும்.

இவ்வாறான ஒரு பண்பாடாகவே இருந்து வந்த சங்க காலக் காதல். இன்று கலாசாரமாக மாறியுள்ளது. "செம்புலப் பெயனீர்க் காதலை" எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும். எங்கு காதல் புரியக் கூடாது எனவும் நற்றிணை அழகாகக் கூறுகிறது.

விளையாடு ஆயமொடு வெண்
மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை
அகைய
நெய் பெய் தீம்பால் பெய்தினிது
வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை
ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது
சிறப்பே
அம்ம நாணுதும் நும்மோடு
நகையே
விருந்தினர் பாணர் விளரிசை
கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும்
இலங்கு நீர்த்
துறை கெழு கொண்க நீ நல்கின்
நறை படு நிழல் பிறவுமார்
உளவே நற்றிணை-172

காலத்தால் முந்திய அக நானூற்றிலும், நற்றிணையிலும் புன்னையின் சிறப்புக்கள் வெகுவாகப் பேசப் பட்டுள்ளன. மாலை மயங்கியதொரு வேளையிலே புன்னை மரத்திடியில், காதல் கொள்ள தலைவியை அழைக்கிறான் தலைவன். அவளோ புன்னை என் சகோதரி என சொல்லி மறுக்கிறாள். தலைவன், தன் காதலை வெட்டிவிடவே தலைவி வெட்டிப் பேசுகிறாள் என மனமொடியும் வேளை, தலைவி உரைக்கிறாள், "சிறுவயதில் புன்னை விதைகளை வைத்து விளையாடுகையில் விளையாட்டாய்ப் புதைத்த விதை இன்று மரமாகி நிற்கிறது. நெய்யையும் பாலையும் ஊற்றி வளர்க்கப்பட்ட இப் புன்னையின் நிழலிலேதான் எமது இளமைப் பிராயத்தைக் கழித்துதோம். ஆகவே இப்புன்னை என் சகோதரி. இவள் முன்னால் என்னால் உன்னோடு காதல் கொள்ள முடியாது." எனும் வார்த்தைகளில் இன்றைய பேருந் தின் பின்னிருக்கைகளில் நடைபெறும் காதல் லீலைகள் அனைத்தும் தூக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

தமிழனின் பண்பாட்டையே இப்பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. நம் பண்பாடு, இன்று எந்த நிலையில் உள்ளது என்பதைப் பேருந்தில் பயணிக்கும் ஒவ்வொருவரும் கண்டு கொள்ளலாம். காதல் என்பது தவறல்ல. அத்தகைய காதலை வாழ்வியல் நெறிகளை மீறிப் பிரக்ஞையற்று வெளிப்படுத்தலே பண்பாடற்ற செயலாகும்.

என்ன தான் சமூக மாற்றம் மறுமலர்ச்சி, என்று சந்திக்கு, சந்தி நின்று நாம் முழங்கினாலும், இவை தனி மனித மன மாற்றம் மற்றும் சீரான குடும்ப வாழ்விலிருந்துதான் உருவாக் முடியும். பெற்றோர் ஒருவரை ஒருவர் பழி தீர்த்துக் கொள்வதால், சீரழிவது அவர்களின் சின்னஞ்சிறு குழந்தைகளே. அதனாலேயே நல்ல "தொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம், அன்பு மணி வழங்கும்

மன்னார் அமுதன்

சுரங்கம்" என்று பாடுகிறான் ஒரு கவிஞன்.

(தொடரும்)

# நீரிழிவு நோய் உடலை பாதிக்கும் விதம்

இவ்வாறு படியும் கொழுப்புகள், பற்களின் மீது படியும் மஞ்சள் நிறக் கறைகளைப் போல இரத்த நாளச் சுவரிலும் படிந்து, குழாய்களின் உட்புறச் சுற்றளவை குறைக்க ஆரம்பிக்கும். நாளடைவில் அந்த வழியே இரத்தப் போக்குவரத்து சரியாக நடக்காத அளவுக்கு இரத்தக் குழாய்கள் சுருங்கிவிடும். அதுமட்டுமல்ல இரத்த ஓட்டம் இல்லாததால், திசுக்களுக்கு குளுக்கோஸை வழங்கும் இரத்த நாளங்களின் முனைப் பகுதிகளான தந்துகிகள் (கேபில்லரி) பாதிக்கப்படும்.

இந்த தந்துகிகள் கை, கால்கள், பாதம், விரல்கள் போன்ற இடங்களில் சற்று கடினமாகவும் கண், மூளை போன்ற இடங்களில் மென்மையாகவும் இருக்கும்.

சீனியால் இவற்றின் நுனிப் பகுதிகள் விரிவடைந்து அல்லது நைந்து சிதைந்து விடுவதால் இரத்தக் கசிவு, பின்னர் அழிதல் என பல பிரச்சினைகள் உருவாகும்.


இவ்வாறு இரத்தக் குழாய்கள் சிதைந்து சுருங்குவதால் இரத்த அழுத்தம் அதிகமாகும்.

இதயப் பிரச்சினைகள் உருவாவதால் அடிக்கடி நெஞ்சு வலிக்க ஆரம்பிக்கும்.

சில சமயம் திடீரென மாரடைப்பும் வரலாம்.

பொதுவான இரத்த நாளங்க்ள் மற்றும் இதய இரத்த நாளங்கள் சிதைவதால் இதயத்திற்கு இரத்த ஓட்டம் செல்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டு மாரடைப்பு, இதயம் செயற்படாத நிலை வருவது உட்பட பல்வேறு பிரச்சினைகள் உடலில் தோன்றும்.

மூளைக்கு இரத்த ஓட்டம் செல்வது தடைப்படுவதால் பக்கவாதம் வந்துவிடும்.




ஆணுறுப்புக்கு இரத்த ஓட்டம் செல்லாததாலும் அங்குள்ள நரம்புகள் பாதிக்கப்படுவதாலும் ஆண்மைக் குறைவு நேரிடும்.

கால்களுக்குச் செல்லும் இரத்த நாளங்கள் பாதிக்கப்படும் போது இரத்த ஓட்டம் மற்றும் ஒட்சிசன் இல்லாமல் கால்கள் அழுகி அவற்றை எடுக்க வேண்டியிருக்கும்.

இவையெல்லாம் நீரிழிவு நோய் இரத்த நாளங்களை பாதிப்புக்கு உண்டாக்கும் விதங்களாகும்.

**நரம்பு பாதிப்புகள்**

நரம்புகள் சரியாக வேலை செய்யாவிட்டால் திசுக்களில் இருந்து மூளைக்கு சரியான தகவல்கள் போகாது.

தொடு உணர்வைக் கடத்தும் நரம்புகளின் முனைகள் அழுகுவதால் தொடு உணர்ச்சி இல்லாமல் போவதைத் தொடர்ந்து பிரச்சினைகள் உருவாகும்.

நீரிழிவு நோய் ஒவ்வொரு உறுப்பையும் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கும்.

உதாரணத்திற்கு சிறுநீரகத்தின் இரத்தக் குழாய்களில் விரிசல், அடைப்பு, சிதைவு, இரத்தக் குழாய் தடித்தல் போன்றவை நீரிழிவு நோயால் தூண்டப்படும்போது சிறுநீரகம் பாதிக்கப்படும்.

**கர்ப்பிணிக்கு நீரிழிவு நோய் உண்டாகும் விதம்**

கர்ப்பகாலத்தில் கூடுதலாக ஓமோன் உற்பத்திகள் அதிகமாக இருக்கும். தாயின் இரத்த அளவும் அதிகரிக்கும். இரத்த அளவுக்கு ஏற்ப இரத்த சீனியின் அளவும் அதிகரிக்கும். இந்த அளவை ஈடுசெய்வதற்காக அதிகமான இன்சுலினை கணையம் சுரக்க வேண்டியிருக்கும்.

இந்த செயற்பாட்டில் குறைபாடு தோன்றி




05



கணையம் போதுமான இன்சுலினை சுரக்காவிட்டால் இரத்த சீனி அளவு அதிகரிக்கும். இவ்வாறுதான் கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோயை தோன்றுகிறது. இதைப் பரிசோதனை செய்யாவிட்டால் தாய்க்கு நீரிழிவு நோய் இருப்பது தெரியாது. குழந்தை பிறந்ததும் இந்தப் பிரச்சினை சரியாகிவிடும்.

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D., P.G.D.C.G., D.M.R.,
சென்னை.

**கர்ப்பகால நீரிழிவால் ஏற்படும் பாதிப்புகள்**

கர்ப்பகாலத்தில் சுமார் பதினாறு முதல் பதினேழு விழுக்காடு பெண்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுகிறார்கள்.

கருத்தரித்த காலத்தில் நீரிழிவு நோய் இருந்து குழந்தை பிறக்க நேரிட்டால் குறை பிரசவம். அதிக எடையுடன் குழந்தை பிறத்தல், வயிற்றிலோ அல்லது பிறந்த உடனோ குழந்தை இறந்துவிடுதல். பிறவியிலேயே ஊனமாகப் பிறத்தல் ஆகியவை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. (முற்றும்)

# மஞ்சட் காமாலை



**மஞ்சள் காமாலை என்பது உண்மையில் என்ன?**

மஞ்சள் காமாலை என்பது நோயின் அறிகுறி மட்டுமே. அதுவே ஒரு நோய் அல்ல. காமாலையை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து உரிய சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணமடையலாம். வயதான சிவப்பு அணுக்கள் மண்ணீரலில் அழிக்கப்படுகிறபோது பிலிரூபின் என்ற மஞ்சள் நிறப்பொருள் உடலில் உற்பத்தி ஆகிறது. இரத்தத்தின் வழியே கல்லீரலை அடையும் பிலிரூபின், பித்தநீர் மூலமாக மலம், சிறுநீர் வழியில் வெளியேறுகிறது. கல்லீரல் பாதிக்கப்பட்டாலோ, பித்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலோ கழிவுப் பொருளான பிலிரூபின் உடலிலேயே தங்கி விடுகிறது. இதன்காரணமாகவே உடலில் மஞ்சள் நிறம் ஏற்படுகிறது. மது அருந்துதல், ஹைபடைட்டிஸ் கிருமிகள் (ஏ,பி, சி, டி, ஈ) கல்லீரலைத் தாக்குவது போன்றவற்றாலும் மஞ்சள்காமாலை ஏற்படுகிறது.

**மஞ்சள் காமாலையின் அறிகுறிகள் எப்படி இருக்கும்?**

வாந்தி, குமட்டல், பசியின்மை, உடற் சோர்வு, வயிற்றின் வலதுபக்க மேல் பாகத்தில் வலி, மூட்டு வலி, வயிறு வீக்கம், காய்ச்சல் , இரத்தக் கசிவு ஆகியன மஞ்சள் காமாலையின் அறிகுறிகளாகும். நாளாக நாளாக சிறுநீர் மஞ்சளாக வெளியேறும், கண்ணின் வெள்ளைப் படலத்திலும் நாக்கின் அடிப் பகுதியிலும் மஞ்சளாக இருக்கும்.

**மஞ்சள் காமாலையில் வகைகள் அதிகமாகவா இருக்கின்றன?**

இரண்டு வகையான காமாலை உள்ளது. அடைப்பு காமாலை, அடைப்பில்லாத காமாலை. இதில் அடைப்புக் காமாலை என்பது கொழுப்புச்சத்துள்ள உணவுகளை நாம் சாப்பிடும் போது அதை ஜீரணிப்பதற்காகக் கல்லீரல் பித்தநீரைச் சுரக்கிறது. இந்தப் பித்தக்குழாயில் கல் மற்றும் புற்றுநோய் கட்டிகளால் அடைப்பு ஏற்படலாம். அப்படி அடைப்பு ஏற்பட்டால் பித்தநீர் கல்லீரலிலேயே தேங்கி இரத்தத்தில் கலந்து விடுகிறது. இதனால் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது.

அடைப்பில்லாத காமாலை என்பது கல்லீரலைத் தாக்கும் ஏ,பி,சி,டி,ஈ.ஜி என்ற பல வகையான வைரஸ்களாலும் மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. மலேரியா காய்ச்சல், டைபோய்ட்டு காய்ச்சல் வந்தாலும் கல்லீரல் பாதிக்கப்பட்டு இந்த வகை மஞ்சள் காமாலை வரும். மதுபானங்கள் அருந்துவதன் மூலமாகவும் அடைப்பில்லா மஞ்சள் காமாலை ஏற்படுகிறது.

**இரண்டு வகைக் காமாலைக்கும் உள்ள வேறுபாடுகளை எப்படி அறியலாம்?**

அடைப்பு காமாலை, அடைப்பில்லாத காமாலை ஆகிய இரண்டு காமாலைக்கும் சிகிச்சைமுறை வேறுபடும். வயிற்றின் மேற் பாகத்தில் அதிக வலி, விஷக்காய்ச்சல் ஆகியவை அடைப்புக்காமாலைக்கான அறிகுறிகள் ஆகும். இரத்தப் பரிசோதனை மற்றும் ஸ்கான் மூலமாகவே இரண்டு காமாலைகளையும் வேறுபடுத்தமுடியும். பொதுவாக மக்கள் பிலிரூபினின் அளவை மட்டும் இரத்தத்தில் பார்த்தால் போதும் என எண்ணுகிறார்கள்.

ஆனால் இது தவறு. பிலிரூபின் அளவு மட்டுமன்றி கல்லீரலின் வேலைசெய்யும் திறனையும் அறியவேண்டும். இதற்கு லிவர் பங்க்ஸன் எய்ட் என்று அழைக்கப்படும் புரத அளவு, நொதிகளின் அளவு (என்ஸைம்) போன்ற இதர இரத்தப் பரிசோதனைகளையும் செய்யவேண்டும்.

அல்ட்ரா சவுண்ட் ஸ்கான்மூலமாக பித்தக் குழாயில் உள்ள கட்டிகள், கற்கள் போன்றவற்றைத் துல்லியமாகக் கண்டறிந்து சிகிச்சையளிக்க முடியும். எந்தவகை மஞ்சள் காமாலை என்பதை அறியாமல் கீழ்காய் நெல்லிபோன்ற மருந்துகளைச் சுயமாகச் சாப்பிட்டு நோய் முற்றிய பின்னர் மருத்துவ மனைக்கு வருவதால் சிகிச்சை பலனில்லாமல் போய்விடும்.

**அடைப்புக் காமாலைக்கான சிகிச்சை முறை என்ன?**

எண்டோஸ்கோப்பி மூலமாக அல்லது அறுவைச்சிகிச்சை மூலமாக அடைப்புக் காமாலையை முழுமையாகக் குணப்படுத்த வாய்ப்புள்ளது. பித்தக்குழாய் கற்களினால் ஏற்படும் காமாலையைச் சரிசெய்ய முன்பு அறுவைச்சிகிச்சை தேவைப்பட்டது. ஆனால் இப்போது விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சியினால் எண்டோஸ்கோப் மூலம் ஈ.ஆர்.சி.பி என்ற அதிநவீன சிகிச்சை முறையில் கல்லை சத்திரசிகிச்சை செய்யாமலேயே வெளியே எடுத்துவிடலாம்.

**அடைப்பில்லா காமாலைக்கான சிகிச்சை முறைக்கு என்ன மருத்துவம்?**

அடைப்பில்லா காமாலையை சத்து மருந்துகள், வைரஸை அழிக்கும் மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம்.

வைரஸ் கிருமிகளால் கல்லீரல் பாதிக்கப்பட்டு காமாலை வந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க பலதரப்பட்ட நவீன மருந்துகள் உள்ளன. அதாவது வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் உள்ளன.

பழுதடைந்த கல்லீரலை சரிசெய்ய Phospholipids, UDCA போன்ற மருந்துகள் உள்ளன. கல்லீரலைப் பாதுகாக்க விற்றமின்கள், மாச்சத்து அதிகமாக தருவதால் விரைவில் குணமடைய வாய்ப்புள்ளது.

மலேரியா, டைபாய்டு காய்ச்சலால் வரும் காமாலை நோய்க்கு உரிய மருந்து வகைகள் உள்ளன. மது குடிப்பவர்கள் எந்த நிலையில் வந்தாலும் குணப்படுத்த முடியும்.

**மஞ்சள் காமாலையின் பின் விளைவுகள் என்ன?**

காமாலை நோய்க்கு தகுந்த சிகிச்சை பெறாவிட்டால் மோசமான பின் விளைவுகள் ஏற்படும். கல்லீரல் பாதிக்கப்பட்டு மூளையைத் தாக்கி நினைவிழந்து லிவர் கோமா ஏற்படலாம். சிலருக்கு காமாலை சரியாகாமல் பல நாட்கள் தொடர்ந்தால் கல்லீரல் பாதிக்கப்பட்டு சுருங்கி விடலாம். இதை சிரோசிஸ் என்கிறோம். வயிறு, காலில் நீர் கோர்த்து வயிறு பானை போல் காட்சியளிக்கும். மலேரியா, தைபொ

01



ய்ட், மது அருந்துதுல், வைரஸ் கிருமிகள் போன்றவற்றால் கல்லீர்ல் வீக்கம் ஏற்படலாம். இதை ஹெபடைட்டிஸ் என்கிறோம்.

**மஞ்சள் காமாலைக்கு கீழ்காய்நெல்லி சாப்பிட்டால் மட்டும்போதும் என்று சிலர் சொல்கிறார்களே?**

கீழ்காய்நெல்லி இலை ஹெபடைட்டிஸ் பி வைரஸ் கிருமியைக் குணப்படுத்தும் என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது உண்மைதான். இருந்தாலும் இதைத் தெளிவுபடுத்த இன்னும் பல சான்றுகள் தேவைப்படுகின்றன. கீழ்காய்நெல்லிக் கீரையை ஆங்கில அலோபதி மருந்துகளுடன் சேர்த்துச் சாப்பிடுவதில் எந்தத் தவறும் கிடையாது.

**மஞ்சள்காமாலை வருமுன்னர் தடுத்துக் கொள்ள என்ன ஆலோசனைகள்?**

- எப்போதும் சுத்தமான வடிகட்டிய தண்ணீரையே அருந்தவேண்டும்.

குடல் சிகிச்சை நிபுணர்
டாக்டர் டி.எஸ்.சந்திரசேகர், MD., DM.,
சென்னை-17

- பொது இடங்களில் கிடைக்கின்ற தண்ணீரை குடிக்காமல் இருப்பது நல்லது.
- உணவில் ஈ மொய்க்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- திறந்த வெளியில் விற்கப்படுகின்ற உணவுப் பொருட்கள், தின்பண்டங்களை உண்ணாதீர்கள்.
- நகங்களை சுத்தமாக வைத்திருக்கப் பழகுங்கள்.
- மலம் கழித்த பின்னர் கண்டிப்பாக சவர்க்காரம் போட்டுக்கையை கழுவுவது அவசியம்.
- காய்கறிகளை சமைப்பதற்கு முன்பு நன்கு கழுவிவிட்டு சமைக்க வேண்டும்.
- எல்லாவற்றுக்கும் மேலாக சுயசுகாதாரம் கடைப்பிடிப்பது நல்லது.
- வீட்டில் ஒருவருக்கு மஞ்சள்காமாலை என்றால் மற்றவர்கள் எச்சரிக்கையுடன் இருப்பதும் அவசர அவசியமாகும். (முற்றும்)





யாழ். எயிட் அமைப்பினால் காரைநகர் வேரவில் ஸ்ரீ கணேச வித்தியாலயம் மற்றும் தோப்புக்காடு மறை ஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் அத்துடன் யாழ்ற்றன் கல்லூரியில் உள்ள நலிவுற்ற மாணவர்களுக்கும் கற்றலுக்கான உதவிப் பொருட்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரனிஸ்லாஸ் உரையாற்றுவதையும் வெங்கடேஸ்வர நிறுவன உரிமையாளரும் சமூக சேவையாளனுமான செந்தூரன் மாணவன் ஒருவருக்கு உதவிப் பொருட்களை வழங்குவதையும் உதவிப் பொருட்களை பெற்ற வேரவில் ஸ்ரீ கணேசா மாணவர்களில் ஒரு தொகுதியினர், பாடசாலை அதிபர் மற்றும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.எஸ்.பி. நாகரட்னத்துடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# புலிகள் ஆயுதங்களுக்காக ஒதுக்கிய பணம் நாட்டின் அநீதிக்கு பயன்படுகிறது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களுக்காக ஒதுக்கிய பணத்தை தற்போது நாட்டுக்கு களங்கம் ஏற்படுத்த பயன்படுத்துகின்றனர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சித்து வருகின்றனர்.

புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்த போதிலும் நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள் குறையவில்லை.

பயங்கரவாத நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் நாட்டுக்கு எதிரான சேறு பூசல்கள் இன்னமும் நிறுத்தப்படவில்லை.

எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் நாட்டு மக்களை தனிமைப்படுத்தப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் இரத்துச் செய்யப்பட்ட போதிலும் மக்களுக்கான நிவாரணங்களை நிறுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தக் காரணத்திற்காகவும் மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது. (4-2)


# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா அன்னபூரணம்



நீர்வேலி வடக்கு, காமாட்சியம்பாள் கூட்டுறவுச் சங்கத்தடியைச் சேர்ந்த நடராசா அன்னபூரணம் (14. 10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை நடராசா (கார்க்கார நடராசா)வின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கோண்டாவில்), விநாயகமூர்த்தி (லண்டன்), கமலாதேவி, விமலாதேவி, திருஞானசம்பந்தன் (மூர்த்தி, கமநலசேவை நிலையம்), சிவபாலசிங்கம் (கொலன்ட்), அருளானந்தம் (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.10.2011 (செவ்வாய்க்கிழமை) இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11 மணியளவில் சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காமாட்சியம்பாள்
சங்கத்திற்கு அருகாமையில்,
குறுக்குறோட், நீர்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்.
தொ.பே:021 4902156

(660)


# 2011.10 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1356-சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற நிலநடுக்கம் அதன் பேசல் நகரை முற்றாக அழித்தது.

★ 1860-இரண்டாவது ஒப்பியம் போர் முடிவுக்கு வந்தது.

★ 1867-ரஷ்யாவிடம் இருந்து அலாஸ்கா மாநிலத்தை ஐக்கிய அமெரிக்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலர் விலை கொடுத்து வாங்கியது. இந்நாள் அலாஸ்கா நாள் எனக் கொண்டாடப்படுகிறது.

★ 1898-ஐக்கிய அமெரிக்கா புவெர்ட்டோ ரிக்கோவைக் கைப்பற்றியது.

★ 1908-பெல்ஜியம் கொங்கோவைக் கைப்பற்றியது.

★ 1912-முதலாம் பால்க்கான் போர் ஆரம்பமாகியது.

★ 1922-பிபிசி வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1929-கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஹிட்லரிடமிருந்து ஜேர்மன் தேசிய இராணுவத்தை அமைப்பதற்கான கட்டளை பிறந்தது.

★ 1944-சோவியத் ஒன்றியம் செக்கொசுலவாக்கியாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது.

★ 1945-வெனிசுவேலாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதன் ஜனாதிபதி பதவியிழந்தார்.

★ 1851-இங்கிலாந்தில் பளிங்கு அரண்மனையில் அனைத்துலக வர்த்தகக் கண்காட்சி முடிவுற்றது.

★ 1954-டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் முதலாவது டிரான்சிஸ்டர் வானொலியை அறிமுகப்படுத்தியது.

★ 1967-சோவியத் விண்கலம் வெனேரா 4 வீனஸ் கோளை அடைந்தது. வேறொரு கோளின் வளிமண்டலத்தை அளந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1991-அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்து விலகியது.

★ 1991-நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1910-வி.நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக். கட்சியின் மூத்த தலைவர் (இ.2006)


★ 1956-மார்டினா நவரதிலோவா, டென்னிஸ் வீராங்கனை

★ 1960-ஜான் குளோட் வான் டாம், நடிகர்

★ 1978-ஜோதிகா, இந்தியத் திரைப்பட நடிகை


### இறப்பு

★ 1931-தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (பி.1847)



★ 1871-பிரித்தானிய கணிதவியலாளர் சாள்ஸ் பபேஜ் நினைவுதினம் (பி.1791)

# நவீன எண் சோதிடம்



## பிரச்சினைகள் வரும்போது ஆண்டவனை மனதில் நினைந்து கொண்டு துணிந்து செயற்படுவர்

73

### உடல் எண் ८ உயிர் எண் ९

8,17,26 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற உயிர் எண் 9 வருமே யானால் இவர்கள் சனி, செவ் வாய் ஆதிக்கத்தில் பிறந்த வராவர்.

இவர்கள் பார்பதற்கு கம்பீர மாகவும், சுமாரான உயரத்து டனும், மிதந்த கண்களுடனும் காட்சியளிப்பர். இன்னும் சிலர் 30 வயதிற்கு மேல் பருத்த சரீரத்துடனும் பற்கள் பெரிதா கவும், உறுதியற்றும் காணப் படுவர். கவலையை எளிதில் மறந்து வாழும் இவர்கள் முகச் செழிப்புடன் காட்சியளிப்பர். எப்பொழுதும் பிறருக்கு உதவ முன் வருவதால் மற்றவர்களை எளிதில் கவர்ந்து விடுவர்.

தன் மனக் கருத்துக்களை மறைக்காது தைரியமாக வெளியி டுவர். எப்பொழுதும் மகிழ்ச்சி யாக வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்ட இவர்களுக்கு எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் உடனே தீர்வுகாண முயல்வர். ஒரு காரியத்தில் இறங்கினாலும் அதை முடிக்கும் வரை அதைப் பற்றிய சிந்தனையிலேயே இருப் பர். இவர்கள் இளமையில் பல்வேறு சோதனைகளைச் சந்தித்தாலும் படிபடியாக உயர்ந்த நிலையை அடைவர்.

பிறர் கஷ்டங்களை கண்டு மனமிரங்கி உதவி செய்வதால் பலரிடம் நல்ல மனிதர் என்று பெயர் எடுப்பர். இன்னும் சிலர் ஏகாந்தவாதியாக வாழ்கின்றனர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உடல் பலமும், மனபலமும் கொண்ட இவர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விடுமேயா னால் நல்ல ஆரோக்கியம்,நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் ஆகியவற்றைப் பெற்று வாழ்வர்.

ஆனால், பெயர் அமையா விட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பமாகி ஆரோக்கியம் கெட்டோ, விபத்துக்கள் உண்டா கியோ பணம் பற்றாக்குறையில் மனவேதனை அடைவர். இதனால் பெயரைப் பொருத்தமான எண் களில் அமைத்துக் கொள்வது அவசியம். தெய்வ நம்பிக்கை கொண்ட இவர்கள் கோயிலுக்குச் சென்று வழிபடுவதைவிட தான் இருக்கும் இடத்தில் ஆண்டவனை தியானிப்பர். தனக்குப் பிரச்சினை வரும்போது ஆண்டவனை நினைத் துக் கொண்டு துணிந்து செயற்படு வர்.

சிற்றின்பங்களில் அதிக நாட்ட முடைய இவர்கள் பேரின்ப வாழ்க்கையிலும் அதிக ஈடுபாடு உடையவராக இருப்பர். இவர்கள் மனம் இயற்கைக் காட்சிகளையும், மலைப்பாங்கான இடங்களையும், நீர்த் தேக்கங்களையும், நீர் வீழ்ச்சி களையும், கண்டு அமைதி கொள் ளும். அழகான வீடு கட்டுவதிலும், அழகான வாகனங்கள் வாங்கு வதிலும் ஆர்வமுடையவராக இருப்பர்.

பொறுமையுடைய இவர்களுக் குச் சில சந்தர்ப்பங்களில் முரட்டுக் குணம் வெளியாகும். காந்த சக்தியுடைய கண்கள் கொண்ட இவர்கள் எதையும் உன்னிப்பாக கவனிப்பர். எல்லாவிதமான சுகங் களையும் அனுபவிக்க ஆசைப்படு வர். எதிரிகளைத் தைரியமாக எதிர்க்கவும் தன்மீது அன்பு காட்டு கின்றவர்களுக்குச் சிறந்த அன்ப ராகவும் விளங்குவர். நண்பர்கள் புடைசூழ வாழும் இவர்களது வாழ்க்கை நேற்றுவரை சாதாரண மாக இருந்தாலும் இன்றே பிரகா சிக்கலாம்.

பிறருக்கு உதவும் இவர்கள் தன்னை உயர்த்திக் கொள்ள புதிய திட்டம் தீட்டிக்கொண்டே இருப் பர். தன்னை உயர்த்திக் கொள்ளத் தெரியாதவர்கள் பிறரை உயர்த்தத் தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள். தனியே செல்லும் போது தனக்குள்ளே பேசிக் கொண்டு செல்லுவர். ஜோதிடம், சட்டம், சமயம் போன்றவற்றில்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

ஆராய்ச்சி இருக்கும். இவர்கள் பெரிய வியாபாரிகளாகவும், தொழில் அதிபராகவும், இஞ்சினி யர், டாக்கடர், வக்கீல், ஆசிரியர் கள் போன்ற பல்வேறு உத்தியோ கஸ்தர்களாகவும் இருக்கின்றார்கள்.

ஆனால், பெயர் நன்றாக அமை யாவிட்டால் நோயாலோ, வாழ்க் கையில் உயர்வு பெற முடியா மலோ, குடும்ப பிரச்சனையாலோ, தவிக்கின்றனர். இதனால் பெயரை பொருத்தமான நல்ல எண்ணில் அமைத்துக் கொண்டு சிறப்புடன் வாழலாம்.

**தொழில்**

பல பொருள் வியாபாரம், இரும்பு, மெட்டல், வாகனம், சம்பந்தமான தொழில், காண்ட் ராக்ட், கமிஷன், ஏஜென்சீஸ், அழகு சாதனங்கள் சம்பந்தப் பட்டவை போன்ற தொழிலால் உயர்வடைவர்.

**நோய்**

இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு, முதுகுவலி, பல்வலி, மூட்டுவலி கண்சம்பந்தமான நோய், ரத்த அழுத்தம் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு புதன்,சுக்கிரன் போன்ற ஆதிக்கமான 5,14,23, 32,41,50,59,77,15,24,33,42,51,60,69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-5,6

யோகமான தேதிகள்-5,14,23, 6,15,24,9,18,27,10,19,28

யோகமான மோதிரக்கல்- நீலக்கல், நீல அக்கோமரின்

யோகமான நிறம்- நீலம், மஞ்சள்

ஆகாத தேதிகள்- 8,17,26,7, 16,25,2,11,20,29

ஆகாத நிறம்- கறுப்பு, பச்சை

## அதிர்ஷ்டமான கற்களை அணிந்து நற்பலன் பெறலாம்

**வெளிர் நீலக்கல்**

மேற்குறிப்பிட்ட நீலக் கல்லின் தன்மையைக் கொண்டே, இந்தக் கல்லை 4 எண் காரர்களே அணியவேண்டும். இதிலும் ஆறு நூல் உள்ள கல் உள்ளது. இது சுப்பர் பவர் கொண்டவை. விலை உயர்ந்தவை.

**கோமேதகம்**

இதை அணிந்தால், பூரண தெய்வ பலன் கிடைக்கும சாத் வீகம், ஆத்மீக வளர்ச்சி , செல்வ வளர்ச்சி, நோய் நிவர்த்தி போன்ற நன்மைகளைச் செய்தாலும். இதை 4 எண்காரர்கள் தான் அணிய வேண்டும். விலை குறைவு.

**எமிதிஸ்ட்**

கத்தரிப்பூ நிறம் கொண்ட இந்தக்கல்லை குரு ஆதிக்கம் கொண்ட 3 எண் காரர்களே அணிய வேண்டும். புகழும் செல்வமும் விருத்தியாகும். இதன் விலை குறைவே.

**மரகதம்**


செய்யும் தொழில் விருத்தி யையும் அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது இதை 6 எண்காரர்களே அணிய வேண் டும். இவர்களுக்குப் பூரண பலன் தரும். ஆனால், வில உயர்வானவை. நிறம் பச்சை.

**ஜேட்**

இதுவும் பச்சை நிறம் கொண்டவையே சீனர்கள் யாவரும் விரும்பி அணிவது ஜேட் தான். நோயைப் போக் கும் தன்மை கொண்டவை. ஆனால், 2 எண்காரர்கள் அணிவதால், யோகம் மிகும். விலை அதிகம்.

**பவளம்**

இதை கடலிலிருந்து கொடி யாகவும் பாறையாகவும் எடுக் கின்றனர். இதை அணிவதால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும் அதிர்ஷ்டம் உண்டாகும். அனால்9 எண் காரர்கள்தான் அணிய வேண் டும். நிறம் சிவப்பு. விலை குறைவு



**முத்து**

கடலிலுள்ள சிப்பியிலிருந்து கிடைக்கக் கூடியது முத்து. உருண்டை யான பால் போன்ற நிறம் கொண்ட இவை. மயில் கலரும் மின் னும் தன்மை யும் உடையவை. அமைதியும் மகிழ்ச்சியும் செல்வ விருத்தி யும் அளிக்கவல்லது. இதை 2, 7 எண் காரர்களே அணிய வேண்டும்.

(தொடரும்)

# போராட்டம் குறித்து அறியாதவர்கள் எமக்கு பாடம் புகட்ட முனைகின்றனர்

## காட்டிக் கொடுத்தவருக்கு மன்னிப்பு இல்லை என்கிறார் ரில்வின்



(கொழும்பு)

தற்போது புதிதாக உருவாகியுள்ள புரட்சியாளர்கள் கொள்ளைக் குழுவினர் எனவும் காட்டிக் கொடுத்தவர்களுக்கும் துரோகிகளுக்கும் ஜே.வி.பி.மன்னிப்பு வழங்காது எனவும் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஜயவர்த்தன கேந்திர நிலையத்தில் நடைபெற்ற புரட்சியாளர் சேகுவேரா வின் நினைவு தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மிகவும் ஆச்சரியமான புரட்சியாளர்கள் சிலர் உருவாகியுள்ளனர். இந்தப் புரட்சியாளர்கள் சிறிய கொள்ளைக் கூட்டத்தை போன்றவர்கள். வேறு நபர்களின் பெயர்களில் தமது பெயர்களை குறித்து கொண்ட பல புரட்சியாளர்கள் உள்ளனர். புரட்சிய மைப்புகளில் உள்ள இப்படியானவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது.

புரட்சி அமைப்புகளில் இருந்த துரோகிகளுக்கும் அவற்றை காட்டிக் கொடுத்தவர்களுக்கு சே தண்டனை வழங்கினார். அவர்களை அவர் மன்னிக்கவில்லை. அவர் தனது கடமையை நிறைவேற்றினார். அதேபோல் ஜே.வி.பி.யை காட்டிக் கொடுத்தவர்களுக்கும் துரோகிகளுக்கும் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும். சேயின் வழியில் சென்று நாம் செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

கைது செய்யப்பட்டு கொலை செய்யப் படும் சந்தர்ப்பத்தில் சி.ஐ.ஏ.அதிகாரி ஒருவர் சேயுடன் பேச முயற்சித்தார். அப்போது சே அந்த அதிகாரியின் முகத்தில் காறி உமிழ்ந்துதுடன் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட போவதாக கூறினார்.

சே சென்ற பாதையில் சென்ற புரட்சியாளன் என்பதன் காரணமாகவே துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டபோது புரட்சி வாழ்க, ஜே.வி.பி.வாழ்க என சகோதரர் ரோஹன விஜேவீரவினால் குரல் கொடுக்க முடிந்தது.

நாட்டில் உள்ள வறிய மக்களுக்காக இரண்டு முறை போராடிய எமக்கு போராட்ட முறைகளை, போராட்டங்களை அறியாதவர்கள், அதன் அனுபவங்கள் இல்லாதவர்கள், புத்தகங்களில் படித்து அறிந்து கொண்டவர்கள் போராட்டங்கள் குறித்து எமக்கு பாடம் நடத்த முயற்சிக்கின்றனர். எமக்கு அது ஒன்றும் தேவையில்லை என ரில்வின் சில்வா மேலும் கூறினார். (4-2)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 16 பேர் கைது

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திகல பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் 16 பேர் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினர் நேற்று ஞாயிறுக்கிழமை மேற்கண்ட விசாரணையின் போது மேற்படி சந்தேக நபர்கள் நான்கு இடங்களில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளும் முகமாக நிவித்திகல பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (4-2)

# கொலன்னாவ கொலை போன்ற சம்பவம் கிளர்ச்சிக்கே வழிவகுக்கும்

## ருவான் விஜேவர்த்தன எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)



கொலன்னாவ சம்பவம் மக்கள் கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடும் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். டட்லி சேனாநாயக்க அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். டட்லி சேனாநாயக்க நினைவுப் பேருரையில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ படுகொலைச் சம்பவம் போன்ற சம்பவங்கள் மக்களை கிளர்ச்சியடைச் செய்யும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பொலிஸ் ஆணைக்குழு, நீதித்துறை ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியன இன்னமும் நிறுவப்படாமை பெரும் துரதிர்ஷ்டமாகவே கருத வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவையான சட்ட ஒழுங்குகள் செய்யப்பட்ட போதிலும் இன்னமும் சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமர் டட்லி சேனா நாயக்க மிக முக்கியமான ஓர் மனித உரிமை செயற்பாட்டாளர் என அவர் பாராட்டியுள்ளார். (4-2)

# துமிந்தவின் பாதுகாப்பு தொடர்பில் அச்சம்

## குடும்பத்தினர் தெரிவிப்பு

(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பாதுகாப்பு குறித்து அவரது குடும்பத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

துமிந்த சில்வா தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

துமிந்தவின் தாயாரும் சகோதரியும் தீவிர சிகிச்சைப் பிரிவில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துமிந்தவிற்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் தொடர்பில் சகல விபரங்களையும் குடும்பத்தினர் கோருவதாகவும் சகல விதமான சிகிச்சைகளையும் நேரில் பார்வையிட வேண்டுமெனவும் கோருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துமிந்தவின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தினால் இவ்வாறு குடும்பத்தினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, சிங்கப்பூரை மையமாகக் கொண்ட இரண்டு மருத்துவர்கள் துமிந்தவை பார்வையிட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைகளுக்காக சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (4-2)

# நாடாளுமன்றில் கொள்ளையர்களும் கொலைகாரர்களுமே அதிகமுள்ளனர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆவேசம்

(கொழும்பு)



நாடாளுமன்றில் கொள்ளையர்களும் கொலைகாரர்களுமே அதிகம் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். கல்வித்துறையின் மூலம் இந்தச் சமூகத்தை சீர்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது. அவ்வாறு இல்லா விட்டால் இந்தச் சமூகம் சீரழிந்து விடும்.

நாட்டின் வளங்களைக் கொள்ளையிடுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். நாட்டில் மிகவும் இலாபகரமான வியாபாரமாக தற்போது அரசியல் மாற்றமடைந்துள்ளது.

தந்தை, மகள், மாமி, மாமா மற்றும் மகன் என குடும்பத்தின் அனைத்து தரப்பினரும் அரசியலில் ஈடுபடுவதற்கு போராடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# அபிவிருத்திகளை மேற்பார்வை செய்ய சிறப்பு அதிகாரி ஒருவரை நியமிக்க முடிவு

## இந்திய தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்காக, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப் படவுள்ளது.

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு பிரிவு என்ற பெயரில் அமைக்கப்படவுள்ள இந்தப் புதிய அலகுக்குப் பொறுப்பாகவும்- இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்குமாக சிறப்பு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா 5 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை அறிவித்திருந்தது.

அத்துடன் வடக்கு, தெற்கு பகுதிகளில் தொடருந்துப் பாதை அமைக்கும் திட்டங்களுக்கும் இந்தியா 800 மில்லியன் டொலர் கடனையும் வழங்கியுள்ளது.

இதுபோன்ற அபிவிருத்திப் பணிகளை இந்தியா மேற்கொள்ளும், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் தமது பணிகளை ஒருங்கிணைப்பதற்கு இந்தியா இதுபோன்றதொரு சிறப்பு அலகை கடந்த ஆண்டில் உருவாக்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்திய வெளிவிவகார செயலர் ரஞ்சன் மத்தாய் அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை அடுத்தே இலங்கையிலும் இந்தப் பிரிவை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் மிக மெதுவாகவே முன்னெடுக்கப்படுவது குறித்து ரஞ்சன் மத்தாய் அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாடு

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தேசிய மாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத் தலைவர் வி.ரி.சகாதேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தேசிய மாநாடு காலை 9.30 மணிக்கும் பிரதிநிதிகள் சபைக் கூட்டம் மாலை 2.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்தோடு தேவையேற்படின் மறுநாள் அதே மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பித்து தொடர்ச்சியாக நடைபெறும்.

இதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தேசிய மாநாட்டிலும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும் நிர்வாக சபை உறுப்பினர்களை சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அத்தோடு புதிய நிர்வாகிகள் தெரிவு தொடர்பான விபரங்கள், தேர்தல் விதிகள், மாதிரி வேட்புமனு விண்ணப்பங்கள் சகல கிளைச் செயலாளர்களுக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிநிதிகள் தேவையான விபரங்களை கிளை அல்லது மாவட்ட செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (4-12)

## போட்டிப்பரீட்சை

(கொழும்பு)

கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ.போல் தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தாம் கடமையாற்றும் வலயக் கல்வி பணிமனைகளில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-2)

# கொள்ளையர்கள் கப்பம் பெறும் குற்றவாளிகளை துடைத்தெறிய ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி கோரிக்கை

**(கொழும்பு)**

**போதைப் பொருள் விற்பனையாளர்கள், கொள்ளையர்கள், கப்பம் பெறும் குற்றவாளிகள் துடைத்தெறியப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகளில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 21 சபைகளையும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சபையையும் கைப்பற்றியது.

இந்த 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தலைவர்கள், உப தலைவர்கள், முதல்வர்கள், பிரதி முதல்வர்கள் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எவரையும் விரட்டிவிட போவதில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார். கொலன்னாவ பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயற்பட வேண்டும். இவர்கள் ஒன்றிணைந்து செயற்படாது போனால் முன்னணியின் வெற்றிக்கு கரும்புள்ளி ஏற்பட்டு விடும்.

தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும். அரசியல்வாதிகள் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை மக்கள் மறக்கவில்லை. வழங்கிய உறுதிமொழிகளை மறந்துவிடக் கூடாது. முடிந்தால் செய் அல்லது விலகிச் செல் என்பதை தாம் நம்புவதாகவும் இதனடிப்படையில் மக்கள் பிரதிநிதிகள் செய்யும் சேவைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

(4-2)

# கனடா பிரசார பொறியில் சிக்காது உண்மைநிலையை அவதானிக்க வேண்டும்

## கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



பயங்கரவாதப் பிரசாரப் பொறியில் கனடா சிக்கியுள்ளதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்த கனடாவின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை என கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

கனடாவினால் இலங்கை தொடர்பில் அண்மைக்காலமாக வெளியிடப்படும் விமர்சனங்கள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ ரீதியாக புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் புலிகளின் பிரசார நடவடிக்கைகள் ஐரோப்பா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி புலிகள் பாரிய பிரசாரங்களை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரசாரப் பொறியில் சிக்காது உண்மை நிலைமையை கனடா அவதானிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவதனை இலங்கை அரசாங்கம் தடுத்து வருவதாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4-2)

# முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கு தனியான கொள்கை அவசியமானது

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)



ஆயுத ரீதியாக பிரச்சினைக்கு தீர்வில்லை என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அதனை அவர் நிராகரித்தார். அதன் பின்னர் தான் மனித மீட்சி போராட்டத்தின் பின்னர் இன்று நாடு நிம்மதியை கண்டுள்ளது என அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறினார்.

மன்னார் மாவட்ட மடு பிரதேச செயலக பிரிவில் மக்கள் வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்க மக்கள் வங்கி பொன்விழா வீடமைப்பு திட்டத்தின் 50 வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கில் அத்தனை மக்களும் மீள்குடியேற்றப்பட்டு தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்ற பேதமின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்று வடக்கில் தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க, பௌத்த மதத் தலைவர்கள் ஒரே மேடையில் அமர்ந்திருக்கின்றார்கள் எனில் அதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாடு சகல மதங்களுக்கும் மனிதர்களுக்கும் சொந்தமான நாடு. அதில் யாருக்கும் கூடுதல், குறைதல் இல்லை. அவர்கள் விரும்பிய மதங்களை பின்பற்றலாம். மொழியினை பேசலாம். ஆனால், அதற்கு மாறாக மதம், இனம், மொழி ரீதியாக அவர்களை கூறுபோட்டு மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்த சிந்திக்கும் சக்திகளுக்கு சாவு மணியை இந்த வடமாகாண குறிப்பாக மன்னார் மாவட்ட மக்கள் அடிப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களை அவர்களது பிரதேசங்களில் மீளக்குடியேற்றுவதற்கு தனியான கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றினை அரசாங்கம் எடுத்து செயற்பட வேண்டிய தேவையிருக்கின்றது. 20 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படுவதில்லை. புதிய மற்றும் பழைய அகதிகள் இன பிரித்து இந்த நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. இது பெரும் அநீதியாகும் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் சுட்டிக்காட்டினார்.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் மில்ரோய் எஸ்.பெர்னாண்டோ, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(4)

# பொதுச்சுகாதார பரிசோதகரின் ஆலோசனையை பெற்று குடிபானங்களை தயார் செய்யுங்கள்

## உணவு விசமாவதை தடுக்க இதுவே வழி

(கொழும்பு)

பெரும்பாலானவர்களுக்கான உணவு மற்றும் குடிபானங்களைத் தயாரிக்கும் போது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதன்மூலம் உணவு விசமாதல் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியுமென அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

பெரும் எண்ணிக்கையானோருக்கு உணவு தயாரிக்கும் போது உலக படிமங்கள், பக்றீரியா மற்றும் அசுத்தங்கள் கலப்பதால் உணவு விசமடையக்கூடிய சாத்தியம் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உணவைத் தயாரிப்பவர்கள் இது குறித்து மிகுந்த அவதானம் செலுத்துவது அவசியமாகும் என்பதுடன் இத்தகைய சந்தர்ப்பங்களில் பிராந்திய பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என உபுல் ரோஹண கூறினார்.

(4-2)

# தங்கம் கடத்த முயன்றவர்கள் விமான நிலையத்தில் கைது

இலங்கையிலிருந்து மலேசியாவிற்கு சட்டவிரோதமாக பணம், தங்கம் கடத்த முயன்ற தாயும் மகளும் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலைய சுங்கப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்படி இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாய் (வயது73), மகள்(வயது 47) ஆகிய இருவரும் அமெரிக்க கடவுச்சீட்டில் மலேசியா செல்லவிருந்ததாகவும் இவர்களிடமிருந்து இந்தியா, தாய்வான், கொரியா, அமெரிக்க நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்துமீட்கப்பட்ட நாணயத்தாள்களின் இலங்கைப் பெறுமதி 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 11 கோடி பெறுமதியான சுமார் 18 கிலோ தங்கமும் இவர்களிடம் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

(4-2)

# வடகிழக்கில் உள்ள அரச காணிகளை வர்த்தக நடவடிக்கைக்கு வழங்க திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள அரச காணிகளை வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்க தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் இதனடிப்படையில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் றொஹான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அரச காணிளை பல்வேறு அரச நிறுவனங்கள் ஊடாக அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது எனவும் இந்த வேலைத்திட்டங்கள் விரைவில் அமுல் படுத்தப்படும் எனவும் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

(4-2)

# உள்ளாட்சித் தேர்தல் மூலம் அரசியல் மாற்றம் ஏற்படும்- விஜயகாந்த்

(சென்னை)

உள்ளாட்சித் தேர்தலில் கடந்த தி.மு.க ஆட்சியில் நடந்தது மீண்டும் வரக்கூடாது என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் வெளி யிட்டுள்ள அறிக்கை தமிழக உள்ளாட்சித் தேர்தலில் அரசியல் கட்சிகள் தனித்தனியே போட்டியிடுகின்றன. தே.மு.தி.க. மார்க்சிஸ் உடன் இணைந்து கூட்டாக தேர்தலில் போட்டி யிடுகின்றது. தமிழகம் முழுவதும் 20 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்த போது மக்கள் பெரும் ஆதரவைத் தெரிவித் துள்ளனர். அரசியலில் உள்ளாட்சித் தேர்தல் மூலம் தமிழக மக்கள் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவர் என்ற நம்பிக்கை உள்ளது. சில இடங்களில் அரசியல் கட்சிகள் எங்கள் வேட்பாளர்ளை மிரட்டுகின்றனர். ஆளுங்கங் சியினர் ஆங்காங்கே உள்ளடி வேலைகளில் ஈடுபடுவதை அதிகாரிகள் கண்டுகொள்ள வில்லை.

உள்ளாட்சி தேர்தலில் கடந்த தி.மு.க ஆட்சி யில் நடந்த நிலை மீண்டும் வரக்கூடாது. அது கடந்த கால வரலாறாகவே இருக்க வேண்டும். பணபலம், அதிகார பலம் தீயசக்திகள் உள் ளாட்சித் தேர்தலை சீர்குலைக்காமல் பார்த் துக் கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கை முடியும் வரை விழிப்போடு இருந்து பணி யாற்ற வேண்டும் என விஜயகாந்த் தெரி வித்துள்ளார். (4-2)



உள்ளாட்சித் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் நேற்று நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் முதல்வர் ஜெயலலிதா ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் வாக்களிப்பதை படத்தில் காணலாம்.

# எடியூரப்பாவின் பிணைமனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(பெங்களூர்)

கர்நாடக முன்னாள் முதல்மந்திரி எடி யூரப்பா மீதான நிலமோசடி வழக்கு விசார ணை லோக் ஆயுக்தா சிறப்பு நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் அவ ரது முன்பிணை மனு தள்ளுபடி செய்யப்பட் டது.

இதைத் தொடர்ந்து அவர் நேற்று முன்தி னம் லோக் ஆயுக்தா சிறப்பு நீதிமன்றில் சரண் அடைந்தார். எடியூரப்பாவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் எடியூரப்பா பிணை கேட்டு கர்நாடக உயர் நீதிமன்றில் மனுதாக் கல் செய்துள்ளார். அவரது சார்பில் சீனியர் வக்கீல் ஜெயக்குமார் மனுவை தாக்கல் செய் துள்ளார். இந்த பிணை மனு நீதிபதி பின்டோ முன்னிலையில் இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வருகிறது. (4-2)

# இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற ஒருவர் கைதானார்

(இராமேஸ்வரம்)

இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற ஒருவரை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்து 38 கிலோ கஞ்சவை பறிமுதல் செய்தனர்.

இராமேஸ்வரம் அருகில் தங்கச்சிமடம் அரியாங்குன்றுகடற்கரையிலிருந்து இலங் கைக்கு பொருட்கள் கடத்துவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அங்கு இரண்டு மூடைகளை எடுத்து சோதனையிட்ட போது கஞ்சா இருப்பது தெரியவந்தது. இரண்டு மூடைகள் எடுத்து சோதனையிட்ட போது கஞ்சா இருப்பது தெரியவந்தது.

அப்பகுதியில் பதுங்கியிருந்த ஜஸ்டின் திரவியத்தை பிடித்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் கஞ்சா மூடைகளை இலங் கைக்கு கடத்திச் செல்வதற்கு இலங்கையில் இருந்து வரும் படகை எதிர்பார்த்து காத்தி ருந்ததாக தெரிவித்தார். மேலும் தப்பியோடிய புஷ்பா தன்ராஜ் என்பவரை பொலிஸார் தேடி வருகின்றனர். கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் ஜஸ்டின் திரவியத்தை தங்கச்சி மடம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (4-2)

# நரேந்திர மோடியின் இரண்டாவது சுற்று உண்ணாவிரதம் ஆரம்பமாகியது

(துவாரகா)



குஜராத் முதல்வர் நரேந் திரமோடி இரண்டாவது சுற்று உண்ணாவிரதத்தை துவாரகாவில் நேற்று முன் தினம் மேற்கொண்டார். இவருக்குப் போட்டியாக காங்கிரஸ் எம். எல்.ஏயும் உண்ணா விரதம் இருந் தார். குஜராத்தின் அமைதி மற்றும் மத நல்லிணக்கத் தை (சாத்பாவனா மிஷன்) பலப்படுத்தும் வகையில் கடந்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்து மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். மோடி இதைத் தொடர்ந்து ஒவ் வொரு மாவட்டத் தலைநகரத்திலும் தன் உண்ணா விரதம் நடக்கும் என அறிவித்தார்.

அதன்படி துவாரகா நகரில் நேற்று முன் தினம் இரண்டாவது சுற்று உண்ணாவிரதத் தை மோடி மேற்கொண்டார். அப்போது அவர் எந்த ஓர் இலாப நோக்கோடும் நான் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவில்லை. குஜராத்தின் நற்பெயருக்கு களங்கமும் ஏற் பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு பூகம்பத்தால் பாகிஸ் தானும் காஷ்மீரும் பாதிக்கப்பட்டபோது முத லில் உதவிக்கரம் நீட்டியது குஜராத்தான் என்றார்.துவாரகா நகரில் மோடி உண்ணா விரதம் இருந்த 3 கிலோ மீற்றர் தொலைவில் இத் தொகுதியின் காங்கிரஸ் எம்.எல்.ஏ விக் கிரம் மடம் உண்ணாவிரதம் இருந்தார். சஸ் பெண்ட் செய்யப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி சஞ்சீவ் பட்டுக்கு ஆதரவாக செயற்பட்ட வழக்க றிஞர் வி.எச்.கனராவை கைது செய்ய மோடி அரசு முயற்சி செய்வதற்கு விக்ரம் எதிர்ப்பு தெரிவித் துள்ளார். (4-2)

## பாரதச் செய்திகள்

# இரத யாத்திரைக்கு முன்னாள் பிரதமர் என்னுடன் இல்லை

## வேதனை என்கிறார் அத்வானி


தற்போது மேற்கொண்டுள்ள இரத யாத் திரைக்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் ஆதரவு இல்லாதது வேதனை அளிக்கிறது என பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி கூறினார்.

ஊழலுக்கு எதிரான இரத யாத்திரை மேற் கொண்டுள்ள அத்வானி நேற்று முன்தினம் போபால் நகரில் உள்ள துஷாரா மைதானத் தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதாவது, முன்னர் ஐந்து முறை நான் இரத யாத்திரை மேற் கொண்டேன். அப்போதெல்லாம் முன் னாள் பிரதமர் வாஜ்பாஜ் எனக்கு ஆதரவு அளித்தார், வழிகாட்டினார். ஆனால், இந்த முறை வாஜ்பாயின் ஆதரவை நான் இழந்து விட்டேன். ஆனாலும் அவரின் ஆசியைப் பெற்ற பின்னரே யாத்திரையை ஆரம்பித் தேன்.

அதே நேரத்தில் இந்த யாத்திரையின் போது வாஜ்பாய் உடனில்லை என்பது எனக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. அந் நிய நாடுகளில் பணக்கார இந்தியர்கள் குவிந் துள்ள கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2009 லோக்சபா தேர்தலின் போதே தெரிவித்தேன்.

எவ்வளவு பணம் வைப்பு செய்யப்பட் டுள்ளது என்பது பற்றி அதிகாரபூர்வ தகவல் இல்லை என்றாலும் 2.5 இலட்சம் கோடி ரூபாய் இருக்கலாம் என நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டில் ஏராளமான வெளிநாட்டவர்கள் பணத்தை வைப்பு செய்திருந்தாலும் இந்தியர்களின் பணமே அதிக அளவில் உள்ளது. வாக்குக் குப்பணம் கொடுத்த விவகாரத்தில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மூன்று பேர் ஊழலை அம்பலப்படுத்தினாலும் அவர்களும் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது வருத் தம் அளிக்கிறது.

கறுப்புப் பணம் மற்றும் அதை மீட்க மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக நாடா ளுமன்றின் குளிர்கால கூட்டத் தொடரில் மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என அத்வானி கூறினார். பின் போபாலில் இருந்து சிந்த்வாரா என்ற இடத் திற்கு ஹெலிகொப்டரில் சென்ற அத்வானி அங்கிருந்து நாக்பூருக்கு தன் இரத யாத்தி ரையை ஆரம்பித்தார். (4-2)



மத்திய பிரதேச மாநிலத்தில் போபாலில் யாத்திரை மேற்கொண்டுள்ள பா.ஜ. கட்சியின் மூத்த தலைவர் அத்வானிக்கு அம்மாநில பா.ஜ வினர் வரவேற்பதையும் அருகில் சுஷ்மா சுவராஜ் சிவராஜ் சிங் சவுகான் உள் ளிட்டோர் நிற்பதையும் படத்தில் காணலாம்

## இந்தோ.வில் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் குலுங்கின. கடந்த சில வருங்களாக இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது.

நேற்று முன்தினம் சிமேலு தீவில் திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டும் கட்டடங்களை விட்டும் வெளியேறினார்கள். வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். பீதி அடங்கியதும் மீண்டும் வீடுகளுக்கு திரும்பினர்.

இதற்கிடையில் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்தது. பூமிக்கு அடியில் 45.80 கிலோ மீற்றர் ஆழத்தில் இது நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. வழக்கைத்தை விட உயரமான அலைகள் எழுந்ததால் சுனாமி ஏற்படும் என பொது மக்கள் அச்சத்தில் இருந்தனர். ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (4-2)

# ஈரான் அணு ஆயுதங்களை தயாரித்து இரகசிய — ஆவணங்களை வெளியிட வேண்டும் —

## ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகவருக்கு பராக் ஒபாமா நெருக்கடி

ஈரான் அணு ஆயுதங்களை தயாரித்து வருவது குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிட வேண்டும் என ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகவருக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நெருக்கடி கொடுத்து வருகின்றார்.

இந்நிலையில் ஈரான் மீதான குற்றச்சாட்டை அந்நாட்டு ஜனாதிபதி மறுத்துள்ளார். அமெரிக்காவுக்கான சவுதி அரேபியத் தூதர் அல் ஜுபைர் என்பவரைக் கொல்ல சதித் திட்டம் தீட்டியதாக அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை சேர்ந்த ஈரானிய அமெரிக்கர் மன்சூர் அர்பாப் சியாரை எப்.பி.ஐ. சமீபத்தில் கைது செய்தது. இது குறித்து பேட்டியளித்த கமேனி,

அமெரிக்காவின் குற்றச்சாட்டு முட்டாள்தனமானது. சர்வதேச சமூகத்தில் ஈரானைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாக அமெரிக்காவில் உள்ள ஈரானியர்கள் சிலர் மீது அந்நாடு குற்றம் சுமத்தி வருகின்றது என கண்டனம் தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாதி நேற்று முன்தினம் அளித்த பேட்டியில்,

ஈரானியர்கள் பண்பட்டவர்கள். அவர்கள் தாக்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஈரான் மீது அதிகளவில் தடைகளை விதிக்க அமெரிக்கா பல்வேறு வழிகளை ஆலோசித்து வருகிறது. கடந்த 12 ஆம் திகதி ஈரான் மீதான தனது நடவடிக்கைக்கு ஐ.நா.வின் பாதுகாப்பு குழுவின் ஆதரவு வேண்டும் என அமெரிக்கா கோரியது. இதற்கு பிரிட்டன் , பிரான்ஸ் நாடுகள் ஆதரவு தெரிவித்தன. இதற்கு கண்டனம் தெரிவித்த ஈரான் பாதுகாப்பு குழுவுக்கு எழுதிய கடிதத்தில் அமெரிக்கா போரை தூண்டி விடுகிறது என குற்றம் சாட்டியிருந்தது.

கடந்த மாதம் அணுசக்தி முகவர் ஈரானின் இரகசிய அணு ஆயுத உற்பத்தி தொடர்பான ஆவணங்களை வெளியிடுவது குறித்த அறிக்கையை வெளியிட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

அணுசக்தி முகவர் ஒருவேளை அவரது நிர்ப்பந்தத்திற்கு பணிந்து வெளியிடுமானால் ஈரான் மீது நடவடிக்கை எடுக்க அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளுக்கு வசதியாகப் போய்விடும். அமெரிக்காவின் ஆளும் ஜனநாயக கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினர் குடியரசுக் கட்சியினர் இருவரும் ஈரான் மீதான தடைகளை அதிகரிக்க ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா இரண்டும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நேரத்திலும் அரபுலக நாடுகளில் மக்கள் புரட்சி நடந்து கொண்டிருக்கும் நிலையிலும் ஈரான் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகள் பாதகத்தையே உருவாக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பெற்றோலிய பொருட்கள் விற்கும் நிறுவனங்களிடம் இருந்து ஈரானின் குத் படை வாங்கி வருவதை தடுக்க அதன் மீது தடை விதிக்க அமெரிக்காவின் ஆலோசனைகளில் ஒன்று. அப்படி தடை விதிக்கப்பட்டால் பெற்றோலியப் பொருட்களின் விலை உயரும் என்பது சிலரின் வாதம். இதனால் அமெரிக்காவுக்கே பெற்றொலியப் பொருட்கள் தொடர்பான சிக்கல் ஏற்படும் என்கின்றார்கள் அவர்கள்.

இவ்விவகாரத்தை ஐ.நா.வின் பாதுகாப்பு குழுவுக்கு கொண்டு போகத் தான் தீர்மானித்துள்ளது சவுதி அரேபியா. இது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சவுதி தூதர் கொலை முயற்சி குறித்து பாதுகாப்பு குழுவுக்கு தெரிவியுங்கள். இதற்குப் பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என கோரியுள்ளது. (4-2)

## புடின் போட்டியிடுவது முன்னைய சோவியத் ரஷ்யாவை உருவாக்குவதற்கல்ல

### ஜனாதிபதி மெத்வதேவ் தெரிவிப்பு



(மொஸ்கோ) விளாடிமிர் புடின் அடுத்த பிரதமராக வருவது என்பது நாட்டை முன்னைய சோவியத் ரஷ்யாவாக ஆக்கும் முயற்சி அல்ல என ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் தெரிவித்துள்ளார்.


ரஷ்யாவில் அடுத்தாண்டு நடக்க உள்ள ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய பிரதமர் விளாடிமிர் புடின் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கப் போவதாக அறிவித்தார். இதையடுத்து சமீபத்தில் ரஷ்யப் பத்திரிகையில் புடின் எழுதிய கட்டுரை ஒன்றில்,


ஐரோப்பிய யூனியனைப் போல முந்தைய சோவியத் நாடுகள் ஒன்றிணைந்த யூரேஷியா என்ற அமைப்பு உருவாக வேண்டும். இது சோவியத் ரஷ்யாவை மீண்டும் உருவாக்கும் முயற்சியல்ல என கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சித் தொண்டர்களிடையே ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் பேசியதாவது,

பிரஸ்னேவ் , அண்ட்ரோபோவட, செர்னென்கோ, கோர்பசேவ் ஆகியோரின் ஆட்சியில் இருந்த ரஷ்யா வேறு. தற்போதைய ரஷ்யா வேறு. மேலும் புடின் மற்றும் மெத்வதேவ் இருவரில் யார் முற்போக்காளர், அதிகாரம் மிக்கவர் என்ற விவாதம் தேவையற்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின் அரசு நிர்வாகத்தில் விரிவான மாற்றங்கள் செய்யப்படும். புடின் மீண்டும் போட்டியிடுவது முந்தைய சோவியத் ரஷ்யாவை உருவாக்கும் முயற்சி அல்ல என முன்னாள் ஜனாதிபதி மெத்வதேவ் தெரிவித்துள்ளார். (4-2)



அமெரிக்கா, வோஷிங்டனில் நடந்த மார்டீன் லூதர் கிங் ஜூனியர் நினைவு நாள் விழாவில் ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்து கொண்டு உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## முடிவுக்கு வந்தது சர்வாதிகாரி கடாபியின் 42 ஆண்டுகால ஆட்சி

### இருமகன்கள் புரட்சி படையினரிடம்



(டிரிபோலி) கடாபி மாளிகையின் சுவர் புல்டோசர்கள் மூலம் இடிக்கப்பட்டது. லிபியாவில் சர்வாதிகாரி கடாபியின் 42 ஆண்டுகால ஆட்சிக்கு போராட்டத்தின் மூலம் பொதுமக்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டனர். மக்களின் புரட்சி படையின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடாபியின் மனைவி, மகள் மற்றும் 2 மகன்கள் நாட்டை விட்டு ஓடி விட்டனர். மேலும் 2 மகன்கள் புரட்சி படையிடம் சிக்கினர்.

ஆனால் கடாபி மட்டும் தலைமறைவாக இருக்கின்றார். அவரை கைது செய்ய தீவிர தேடுதல் வேட்டை நடக்கிறது. ஜனாதிபதி இருந்த போது கடாபியும் அவரது குடும்பத்தினரும் மிக ஆடம்பரமான சொகுசு வாழ்க்கை நடத்தினர். கடாபியின் பிரமாண்டமான மாளிகை பாப் ஆல் அஷிஷ்யா நகரில் உள்ளது. இது லிபியாவின் தலைநகர் டிரிபோலியின் புறநகர் பகுதியில் உள்ளது. தற்போது புரட்சிப்படையின் பிடியில் இருக்கும் இந்த மாளிகையின் காம்பவுண்டு சுவர்கள் மிக உயரமாக பாதுகாப்புடன் யாரும் நுழைய முடியாத வகையில் கட்டப்பட்டு உள்ளது.

அவை நேற்று முன்தினம் புல்டோசர்கள் மூலம் இடித்து தரை மட்டமாக்கப்பட்டன. இதை ஏராளமான மக்கள் கூடி நின்று பார்த்து ரசித்தனர். அப்போது கடவுள் மிகப் பெரியவர். இது நாட்டுக்காக உயிரை விட்ட தியாகிகளின் இரத்தத்தால் கட்டப்பட்டது என்பன போன்ற கோஷங்களை எழுப்பினார்கள். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

இதற்கிடையே கடாபியின் ஆதரவு கடைசி நகரான பானிவாலிட்டையும் புரட்சி படை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றது. அங்கு புரட்சிப் படையின் வீரர்கள் முன்னேறி வருகின்றனர். சிர்த் நகரிலும் தொடர்ந்து சண்டை இடம்பெற்று வருகின்றது. (4-2)

## அண்டார்டிக்கா ஓசோன் மண்டலத்தில் பாரிய ஓட்டை

### விஞ்ஞானிகள் தகவல்



(வோஷிங்டன்) வடஅமெரிக்காவை விட அண்டாட்டிக்கா ஓசோன் மண்டலத்தில் பாரிய ஓட்டை விழுந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சுற்றுச்சூழல் மாசு காரணமாக பூமியின் மேற்பரப்பில் உள்ள ஓசோன் மண்டலத்தில் மாசு ஏற்பட்டுள்ளது தற்போது அதில் ஓட்டை விழுந்துள்ளது. எனவே சூரிய கதிர்களின் அல்ட்ரா வயலட் கதிர்கள் பூமியில் விழும் வாய்ப்பு உள்ளது. இதனால் பூமியில் வாழும் உயிரினங்கள் மற்றும் தாவரங்களுக்கும் ஆபத்து ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை பனி படர்ந்து கிடக்கும் அண்டாட்டிக்கா கண்டத்தில் தான் கடந்த 1970 ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டது. தேசிய ஓசியானிக் மற்றும் விண்வெளி நிர்வாகம் அனுப்பிய போய்ஸ் என்ற செயற்கைக் கோள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

முதலில் சிறிய அளவில் விழுந்த ஓட்டை தற்போது பெரிதாகி வருகின்றது. இந்த நிலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தின் சார்பில் பூமியை ஆராய்ச்சி செய்வதற்காக அனுப்பப்பட்ட ஆரா என்ற செயற்கைக் கோள் அனுப்பப்பட்டது.

அதன் மூலம் நடத்தப்பட்ட ஆய்வில் 2 கோடியே 75 இலட்சம் சதுர கிலோ மீற்றர் தூரத்திற்கு ஓட்டை விழுந்துள்ளதாக கண்டறியப்பட்டது. தற்போது பெரிய அளவில் உள்ளது. இது வ்ட அமெரிக்க கண்ட ஓசோன் மண்டலத்தில் விழுந்துள்ள ஓட்டையை விட மிக பெரியதாகும். (4-2)

ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக் காரணம் என்பது அனுபவத்தின் படிப்பினை.

*– சார்லஸ் பக்ஸ்டன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அறிக்கையும் கண்டனமும் தாக்குதலை நிறுத்துமோ!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் நேற்று முன்தினம் தாக்கப்பட்ட செய்தி மீண்டும் பயம், பீதியை உருவாக்கியுள்ளது.

மாணவத் தலைவன் தாக்கப்பட்டது தொடர்பில் விசாரணை வேண்டுமென்ற வழமையான முணுமுணுப்புகள் அறிக்கைகளாக, ஆவேசக் கருத்துகளாக வெளிவரும் என்பதில் ஐயுறவு ஏதுமில்லை.

அதேநேரம் கண்டனம் தெரிவித்துத் தங்கள் இருப்பைக் காட்டிக்கொள்வதற்கான முண்டியடிப்புகளுக்கும் குறையிருக்காது. தமிழினத்தில் யார் தாக்கப்பட்டாலும் இதுதான் மரபு என்பதைத் தெரிந்துகொண்டிருப்பதால்தான், இனந்தெரியாத தாக்குதல்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

நம்மைப் பொறுத்தவரை தாக்குதல் தொடர்பில் விசாரணை தேவையென்பதோ அல்லது தாக்குதல் குறித்து அழகு தமிழில் – அடுக்கு மொழியில் கடும் கண்டனம் தெரிவிப்பதோ அர்த்தமற்றது.

நம் மண்ணில் தாக்குதல்கள், இனந்தெரியாத கொலைகள் நடந்தபோதெல்லாம் பக்கசார்பற்ற விசாரணை தேவை, ஆணைக்குழு அவசியமென்று உச்சஸ்தாயியில் குரலெழுப்பியும் நடந்தது ஏதுமில்லை.

அப்படியாயின் கண்டனங்களும் – விசாரணை தேவையென்ற அறிக்கைகளும் எதற்கு?

அர்த்தமற்ற செயலைத் தொடர்ந்தும் நாம் செய்வோமாயின் அதற்கான பொருள் தத்தம் சுய இருப்பை வெளிப்படுத்துவதாக இருக்குமேயன்றி வேறில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுசேர்ந்து, ஓரணியில் கூடி தமிழர் உரிமை தொடர்பில் வியூகம் அமைக்க வேண்டும்.

இவ்வியூகம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேகமாகப் பரப்புரை செய்யப்பட்டு ஈழத் தமிழினத்தின்பால் உள்நாடு உட்பட சர்வதேசத்தின் கவனத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஆனால், இங்கோ குறைகூறுவார்கள் என்பதற்காகப் புத்திஜீவிகள் பௌவியமாகக் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

அரசியல்வாதிகள் தங்கள் சுயலாபத்திற்காக அறிக்கை தயாரிக்கின்றனர்.

நிலைமை இதுவாயின் இனந்தெரியாத தாக்குதல்களைத் தடுப்பது எங்ஙனம்? ஒரு கணம் சிந்தியுங்கள்.

# சர்வதேச உறவுகளில் இலங்கையின் இருமுனைத் தந்திரோபாயம்!

(கொழும்பு)

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் விவகாரம் சார்ந்து இலங்கையை தனிமைப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறம் நடைபெற்றுவரும் புறச்சூழலில் சீனாவுடன் உறவுகளை வலுப்படுத்துவதிலும் அமெரிக்க படைத்துறையுடனான உறவில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதிலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முனைப்புக் கொண்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியை முன்னெடுப்பதன் ஊடாக பிராந்திய மற்றும் அனைத்துலக கடல் சக்திகளின் கவனத்தினை இலங்கை பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அமெரிக்க மற்றும் இந்திய அதிகாரிகளுக்கு மத்தியில் இடம்பெற்றதாகவும் அதனைக் கண்காணிக்குமாறு அமெரிக்காவிடம் இந்தியா கேட்டுக் கொண்டதாகவும் விக்கிலீக்ஸ் மூலம் அண்மையில் தகவல்கள் கசிந்திருந்தது.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஐலண்ட் பத்திரிகையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகளை தோற்கடித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக இலங்கை பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்த கருத்தரங்கை பிரித்தானியாவும் அமெரிக்காவும் நிராகரித்திருந்தது.

சீனப் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த குழுவினருக்கும் இலங்கை கடற்படைத் தளபதி துணை அட்மிரல் சோமதிலக திஸநாயக்கவிற்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் இருதரப்பும் கடலில் கூட்டுச் செயற்பாடுகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கும் உடன்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கப்பல் ஒன்று இம்மாத நடுப் பகுதியில் காலி துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இது அமெரிக்க கடற்படையினருக்கு இலங்கை கடற்படையினருடன் ஈடுபாட்டினை ஏற்படுத்துவதற்கும் கலாசார பரிமாறலுக்குமான ஒரு வழக்கமான நடைமுறைப் பயணமாகும்.

மேற்குப் பசுபிக் பிராந்தியத்தில் அமைதியையும், திடத் தன்மையையும் நிலைநாட்டும் அமெரிக்க கடற்படையின் நோக்கத்தில் இலங்கையும் ஒரு பிராந்திய நட்பு சக்தி என்பதன் வெளிப்பாடாகவே காலி துறைமுகத்திற்கு அமெரிக்க கடற்படைக் கப்பலின் பயணம் அமைந்துள்ளது.

மனிதாபிமான உதவிகள் மற்றும் இயற்கை அழிவுகளின் போதான மீட்பு நடவடிக்கைகள் உட்பட்ட பாதுகாப்பு சவால்களின் வரலாற்று ரீதியில் அமெரிக்காவினது வலுவான கூட்டாக இலங்கை இருந்து வந்துள்ளது.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இந்தக் கூட்டு இருதரப்பு பாதுகாப்புக்கு உட்பட்ட பொது நலன்களுக்கு பக்கபலமாக இருந்துள்ளது.

அமைதியையும் பொருளாதார திடத்தன்மையையும் ஏற்படுத்துவதற்கு பெருமளவு உதவிகளை சீனா வழங்கியுள்ளதாக சீன பாதுகாப்பு அமைச்சுக் குழுவிற்கு துணை அட் மிரல் திஸ்ஸநாயக்க கூறியதாக கடற்படை தலைமையக பேச்சாளர் கோசல வோன குலசூரிய தெரிவித்துள் ளார்.

• சீனாவின் உயர்தர கடற்படைப் பயிற்சிகள் இலங்கைக் கடற்படையின் செயல்வலுவை அதிகரிக்க உதவியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சீனக் குழுவினர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஒக்டோபர் 12-ம் திகதி சந்திப்பினை மேற்கொண்டுள்ளனர்.

இச்சந்திப்பின் போது கொழும்பு படைத்துறை பயிற்சிக் கல்லூரிக்கான 10 மில்லியன் சீனா யுவான் பெறுமதியான பொருளுதவி வழங்கும் உடன்படிக்கையில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க வியட்நாம் ஜனாதிபதி அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது பாது காப்பு உறவுகள் உட்பட 8 வேறு உடன் படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியை முன் னெடுப்பதன் ஊடாக பிராந்திய மற்றும் அனைத்துல கடல் சக்திகளின் கவனத் தினை இலங்கை பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. (எ-9)

# நாளை முதல் திங்கள் வரை மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்விநியோக வலைப் பின்னலில் அவசர திருத்தவேலைகள் செய்யும் பொருட்டும் வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின்தூண்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமையும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும்

22ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

மறுநாள் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்,

24-ம் திகதி திங்கட் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு , மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி , ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.(சு)

# குடும்பப் பெண் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

(அச்சுவேலி)

தொண்டைமானாறு கெருடாவிலில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து குடும்பப் பெண் ஒருவரின் சடலம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

உடுப்பிட்டியைச் சேர்ந்த இக்குடும்பப் பெண் கெருடாவிலில் உள்ள தனது கணவரின் உறவினர் வீட்டில் கடந்த 10 நாட்களாக தங்கியிருந்த வேளையே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சி.ஈஸ்வரி (வயது 37) என்ற 5 பிள்ளைகளின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணையை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி பா.சுசீந்திரசிங்கம் மேற்கொண்டார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(எ-3,70,52)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



என்றைக்கு ஆன்மீகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயதம் தலையெடுக்க ஆரம்பிக்கின்றதோ அன்று முதல் அந்த சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்து விடுகிறது.

தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால் இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

ஒவ்வோர் உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளே குடி கொண்டுள்ள இந்தத் தெய்வீகத் தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியம்.

எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள் இனியும் தூங்க வேண்டாம். எல்லா தேவைகளையும் எல்லா துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கின்றது.

# தமிழ் மாணவர் சமூகத்தின் மீதான தாக்குதலை உடன்நிறுத்துங்கள்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

எமது பல்கலைக்கழகமானது தமிழ் பேசும் மக்களால் என்றும் உயர்ந்த இடமாக பார்க்கப்படுவதுடன் இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலாக உலகம் எங்கும் வியாபித்து நிற்கின்றது.

ஒரு பல்கலைக்கழகத்தின் மாணவர்களினை வழிநடத்திச் செல்லும் மிகப்பெரிய பொறுப்பு பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் மற்றும் அதன் மாணவ ஒன்றிய உறுப்பினர்களையே சாரும்.

இது இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிற்கும் பொதுவான ஒன்றே. ஆனால் எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆனது இன்றுவரை எமது மாணவர்களை மட்டுமன்றி அனைத்து தமிழ் பேசும் மக்களையும் வழிநடத்தி சென்று கொண்டிருக்கின்றது.

இந்த உயரிய இடத்தினை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எத்தனையோ விலைமதிப்பில்லா உயிர்த் தியாகங்கள் மற்றும் எம் ஒவ்வொருவரினதும் இனப்பற்றின் ஊடாகவே அடைந்தோம்.

இந்த உயரிய இடத்தில் இருக்கும் எமது மாணவ ஒன்றிய தலைவருக்கு நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். பழம் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் என அழைக்கப்படுவோரால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலானது நாங்கள் எங்கே வேண்டுமானாலும் எப்போதும் உங்களை தாக்குவோம் உங்களைக் கேட்பதற்கு யாரும் இல்லை என்ற ஓர் செய்தியை தமிழ் பேசும் மக்களாகிய எங்கள் எல்லோருக்கும் சொல்லி செல்கின்றது.

இதை நாம் தொடர்ந்தும் அனுமதிப்பதா? இன்று எமது பல்கலைக்கழக மாணவ ஒன்றிய தலைவருக்கு நடந்தது நாளை எங்கள் ஒவ்வொரு மாணவர்களிற்கும் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் எங்களிடம் இருக்கின்றது.

நாட்டில் தற்போது ஜனநாயகம் நிலவி வருவதாகவும் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் எந்த பிரச்சினைகளிற்கும் முகம் கொடுக்காமல் இருந்து வருவதாகவும் வெளி உலகத்திற்கு அரசாங்கம் காட்டிக்கொள்ளுகின்றது.

பட்டப்பகலில் நடந்த இந்த சம்பவங்களில் இருந்து சர்வதேச சமூகம் நாங்கள் எவ்வாறான நிலைமைகளில் இருந்து கொண்டிருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எமது பல்கலைக்கழகத்திற்கு பெரும்பான்மை இன மாணவர்களின் வரவு இன்று அதிகரித்துள்ள வேளையில், தமிழ் மாணவர்களின் தலைமைத்துவத்தை விரும்பாத சில சக்திகளின் செயற்பாடே இந்தத் தாக்குதலாகும்.

இது போன்ற தாக்குதல்களை நடத்துபவர்களை நாம் உடனடியாக இனங்காண வேண்டும். அவர்களை சட்டங்களிற்கு முன் நிறுத்த வேண்டும். இல்லையேல் இனிவரும் காலங்களிலும் எமது தமிழ் பேசும் ஒவ்வொரு மாணவர்களும் இந்த தாக்குதல்களுக்கு உள்ளாவார்கள்.

எனவே, யாழ். பல்கலைக்கழக மாணவ சமூகமாகிய நாம் மாணவ அடக்குமுறைகளிற்கு எதிராக முக்கிய சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். அவை வருமாறு,

● ஒவ்வொரு தமிழ் மாணவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

● மாணவ ஒன்றிய தலைவரினை தாக்கியவர்களை உடன் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

● மாணவர் ஒன்றிய தலைவருக்கு தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்திற்கு அருகில் இராணுவ காவலரண் உள்ளது. எமது பாதுகாப்பிற்கு இல்லாத அது போன்ற பாடசாலை மற்றும் எமது பல்கலைக்கழகத்திற்கு மற்றும் மக்கள் செறிந்து வாழும் இடங்களிலுள்ள காவலரண்களை உடனே அகற்ற வேண்டும்.

● மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளிற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

● மாணவர்களின் தனித்துவமான செயற்பாடுகளில் இனந்தெரியாதோர் என அழைக்கப்படுவோர் தலையிடுவது நிறுத்தப்பட வேண்டும்.

நாம் எமது அனைத்து தமிழ் பேசும் மாணவர்களின் உரிமைகளாகவே தெரிவித்து கொள்கின்றோம். மாணவர்களின் உரிமை கோரிக்கைகளை நிலைநிறுத்தும் வரை நாங்கள் எங்கள் விரிவுரைகளை இடைநிறுத்தவுள்ளோம்.

எனவே, எங்கள் கோரிக்கைகளை விரைவாக செயற்படுத்தி அதற்கு தீர்வு வழங்குவதன் மூலம் கற்றலை சிறப்பாக முன்னெடுத்து செல்ல உதவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்கு விரைவான தீர்வினை பெறுவதற்கு எங்களுடன் எல்லா பாடசாலைகள் உயர் கல்விக் கூடங்கள் மற்றும் எங்கள் தமிழ் தேசத்தின் சமூக அமைப்புக்கள் ஒவ்வொன்றையும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (4-6)




## தமிழக அகதி முகாமில் இருப்பவர்களை வாக்காளராக இணைக்காதது ஏன்?

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது அகதிகளாக இந்தியாவிற்கு சென்றவர்களின் வாக்குரிமை மீண்டும் பறிபோகும் நிலையிலேயேயுள்ளது. வெளிநாடுகளிற்கு சென்றவர்களை வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு பல்வேறு அமைப்புக்களும் அரசியல் கட்சி களும் முயற்சித்து வருகின்றன.

ஆனால் இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்களின் நிலை தொடர்பாக எந்த அரசியல் கட்சிகளும் இதுவரை சிந்தித்ததில்லை.

நாட்டில் கொடூரமான யுத்தம் இடம்பெற்ற போது உயிர்களை காப்பாற்றுவதற்காக அகதிகளாக இந்தியாவிற்கு சென்ற நமது உறவுகளின் நிலை தொடர்பாகவும் சிந்திக்க வேண்டியது அவசியம். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருப்பவர்கள் யுத்தத்தில் பாதிப்புற்று மீள்குடியேறிய மக்களுக்காக பல உதவிகளை செய்து வருகின்றனர்.

அவர்களின் நிதியொதுக்கீட்டில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகளை செய்துவிட்டு தமது கட்சியே உதவிகளை செய்தது எனவும் சில அரசியல்வாதிகள் மேடைகளில் முழங்கி வருகின்றனர்.

இதன் காரணமாகவும் அவர்களை வாக்காளர்களாக பதிவதற்கு அந்த அரசியல் கட்சிகள் முயற்சித்து வருகின்றன. ஆனால் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வரும் 80 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் உறவுகளின் வாக்குரிமை தொடர்பாகவும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் எவரும் சிந்திக்கவில்லை.

வெளிநாட்டில் உள்ளவர்களை வாக்காளராக பதிவதற்கு கடவுச்சீட்டு இலக்கத்தை இட்டு உறுதிப்படுத்த முடியும்.

ஆனால் அகதியாக இந்தியர்வில் உள்ளவர்களை எவ்வாறு உறுதிப்படுத்துவது. அவர்களிடம் இலங்கையர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக கடவுச்சீட்டும் இல்லை. கடவுச்சீட்டு பெற்று இந்தியாவிற்கு சென்றவர்களும் இல்லை.

ஆனால் அவர்கள் இலங்கை தமிழர்கள் தான் என்பதை அவர்கள் பேசும் தமிழில் இருந்து அறிந்து கொள்ள முடியும். இருப்பினும் அதை வாக்காளர் பதிவில் இணைக்க முடியாது.

இங்குள்ள உறவினர்கள் மூலம் இந்தியாவின் அகதிமுகாம்களில் உள்ள இலங்கையர்களை வாக்காளர்களாக இணைக்க நடவடிக்கை எடுத்தால் அதிலும் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது.

காரணம் இந்தியாவில் உள்ளவர்களின் உறவினர்கள் எத்தனை பேர் உயிரோடு உள்ளனர் என்பது கேள்விக்குறி. உயிரோடு இருந்தாலும் வாக்காளராக பதியும் நிலையில்தான் உள்ளார்களா என்பது சந்தேகமே.

காரணம் தடுப்பு முகாம்களிலும் தகவல்கள் இன்றியும் பலர் உள்ளனர். எனவே இந்தியாவின் அகதி முகாம்களில் உள்ள எமது உறவுகளையும் சிந்தித்து அவர்களின் ஜனநாயக உரிமையையும் பாதுகாக்க வேண்டியது இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளின் கடமையாகும்.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்ததனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படவுள்ளது என தேர்தல் திணைக்களம் அறிவித்ததும் திகைத்துப் போன அரசியல்வாதிகள் கிராம சேவையாளர் போன்று செயற்படுகின்றனர்.

அந்த விடயம் வரவேற்கத்தக்கது. இருப்பினும் இதனை முன்பே செய்திருந்தால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது என்பது பலரின் கருத்து.

மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே நாம் செயற்படுகின்றோம் என்றும் மக்களுக்காகவே பதவி ஏற்றோம் என்றும் கூறுபவர்கள் எதனால் நாம் பதவி ஏற்றோம் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டால் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை ஏன் இதுவரை எந்த தமிழ் அரசியல்வாதிகளும் உணராதது ஏன்.

-தமிழ்மகன்-

## மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் நியமனம்

மாங்குளம் ஆதார் வைத்தியசாலைக்கு சுகாதார அமைச் சினால் தென்பகுதியில் இருந்து சிங்களமொழி பேசும் பெண் வைத்தியர் ஒருவர் உடனடியாக செயற்படும் படியாக அனுப்பப் பட்டுள்ளார். இது தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த 15 ஆம் திகதி வைத்தியர் திருமதி டி.ஜி.எஸ்.பிரியதர்சிகா என்பவர் கடமையேற் றுள்ளார்.

அத்தோடு பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுக் கொண்டிருக்கும் 40 உள் நோயாளர் தங்கும் விடுதியை ஒரு சில நாட்களுக்குள் வேலையினை நிறைவு செய்து தருமாறு சுகாதார அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளது. இக் கட்டட வேலை பூர்த்தியாகும் பட்சத்தில் இன்னுமொரு வைத்தியர் நியமிக்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் இல்லை என ஏற்க னவே பத்திரிகையால் செய்தி வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-3-15)


சேவை நலனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்



எமது கல்லூரியில் முப்பத்திரண்டு (32) வருடங்கள் இசைத்துறையில் அரும் பணியாற்றி கல்லூரிக்கு புகழ்சேர்த்து 11.10.2011 இலிருந்து ஓய்வுபெற்ற எமது மூத்த ஆசிரியை திருமதி விஜயலட்சுமி இராசநாயகம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் பல்சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வட்டு. இந்துக் கல்லூரி,
சித்தன்கேணி.

(6618)

# இரண்டாவது ஒருநாள் போட்டி: இந்தியா அபார வெற்றி



(புதுடில்லி)

இந்தியா - இங்கிலாந்திற்கிடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி டில்லியில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாட முடிபு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக இங்கிலாந்து அணித்தலைவர் குக், கீஸ்வெட்டர் ஆகியோர் களமிறங்கினர். இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே பெரும் பேரிடியாக அமைந்தது. பிரவீன் குமார் வீசிய முதல் ஓவரின் 4வது பந்தில் அணித்தலைவர் குக் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஜடேஜாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து இரண்டாவது ஓவரில் கீஸ்வெட்டர் ஓட்டமெதுவும் எடுக்காமல் வினய் குமார் பந்தில் கோலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் இரண்டாவது ஓவரில் இங்கிலாந்து அணி ஓட்டமெதனையும் பெறாது 2 விக்கெட்டுகளை இழந்து தவித்தது. அதன்பிறகு களமிறங்கிய பீட்டர்சன் - ட்ராட் ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெதுவாக உயர்த்தியது.

இங்கிலாந்து 39 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ட்ராட், வினய்குமார் வீசிய பந்தில் தோனியிடம் பிடிகொடுத்து அரங்கு திரும்பினார். அவர் 37 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதனையடுத்து பீட்டர்சனுடன் போபரா இணைந்தார். இருவரும் இந்திய அணியின் பந்துவீச்சை எளிமையாகக் கையாண்டு அணியின் ஓட் எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தினர்.

போபரா 36 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் அஸ்வினின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து அடுத்த ஓவரிலேயே பீட்டர்சன், உமேஷ் யாதவ் பந்தில் அணித் தலைவர் தோனியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவர் 53 பந்துகளுக்கு 46 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அதன்பிறகு இணைப்பாட்டத்தினை மேற்கொண்ட பெர் ஸ்டோ - படேல் ஜோடி நிதானமாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையினை கௌரவமான இடத்திற்குக் கொண்டு சென்றது. இவ்விருவரும் சேர்ந்து 86 ஓட்டங்களை எடுத்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 207 ஆகவிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. 42வது ஓவரில் யாதவின் பந்துவீச்சில் படேல் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார். அவர் 53 பந்துகளுக்கு முகங்கொடுத்து 46 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அவரைத் தொடர்ந்து பெர்ஸ்டோ 35 ஓட்டங்களுடனும் பிரெஸ்னன் 12 ஓட்டங்களுடனும் ஸ்வான் 7 ஓட்டங்களுடனும் டெர்ன்பட்ச் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஃபின் 6 ஓட்டங்களை எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில் 48.2 ஓவரிலேயே இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 237 ஓட்டங்களை எடுத்தது. இந்தியா தரப்பில் வினய்குமார் 4 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளையும் அஸ்வின், ஜடேஜா, பிரவீண்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அதன்பின்னர் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதல் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை நேர்த்தியாகக் கையாண்டு ஓட்டங்களைக் குவித்தது.

இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய பார்தீவ் படேல் 12 ஓட்டங்களையும் ரெஹானே 14 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பிறகு களமிறங்கிய காம்பீரும் விராட் கோலியும் இணைந்து இங்கிலாந்தின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். இங்கிலாந்தின் பந்துவீச்சாளர்கள் பல யுக்திகளைக் கையாண்டும் இந்த ஜோடியைப் பிரிக்க முடியவில்லை. இதனால் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது.

அபாரமாக விளையாடிய விராட் கோலி ஒருநாள் போட்டியில் தனது 7வது சதத்தைப் பூர்த்தி செய்தார். அவர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் காம்பீர் 90 பந்துகளைச் சந்தித்து 84 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இறுதியில் 36.4 ஓவரிலேயே நிர்ணயிக்கப்பட்ட 238 ஓட்டங்களை எடுத்து இந்திய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டியில் 2:0 என்ற கணக்கில் தொடர்ந்து இந்தியா முன்னிலையிலுள்ளது.

## பார்முலா-1 கார் பந்தயத்தில் செபஸ்ரியன் சம்பியன்




தென்கொரியாவில் ஆண்டின் 16வது கிராண்ட்பிரிக்ஸ் பார்முலா-1 கார் பந்தயம் நடைபெற்றது. இதன் இறுதிச் சுற்றில் அபாரமாகச் செயற்பட்ட ரெட்புள் ரெனால்ட் அணியின் ஜேர்மனி வீரர் செபஸ்ரியன் வெட்டல் பந்தய தூரத்தை ஒரு மணிநேரம் 38 நிமிடங்கள் 1.994 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார்.

இதன்மூலம் இவர் இந்த ஆண்டு 10வது முறையாகச் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். முன்னதாக அவுஸ்திரேலியா, மலேசியா, துருக்கி, ஸ்பெயின், மொனாகோ, ஐரோப்பா, பெல்ஜியம், இத்தாலி, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் நடந்த தொடரில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இது இவரது 20வது சம்பியன் பட்டமாகும். இந்த வெற்றியின் மூலம் ரெட்புள் ரெனால்ட் அணி சிறந்த கார் வடிவமைப்பாளருக்கான பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

# இலங்கை அணியின் வெற்றி வேகங்களின் கையில் - டில்சான்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வெற்றி வேகப்பந்து வீச்சாளர்களின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளதென இலங்கை அணித் தலைவர் டில்சான் தெரிவித்துள்ளார்.

இலங்கை - பாகிஸ்தான் அணிகளிடையே 3 டெஸ்ட், 5 ஒருநாள், ஒரு இருபது-20 ஓவர் போட்டி ஆகியவை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறுகிறது. இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் இன்று ஆரம்பமாகின்றது. இந்நிலையில் இலங்கை அணியின் தலைவர் டில்சான் கொழும்பில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

கடந்த 20 ஆண்டுகளாக இலங்கை அணி தனது வெற்றிக்கு முரளிதரனின் சுழற்பந்து வீச்சைச் சார்ந்திருந்தது. முரளிதரன் ஒரு இன்னிங்ஸில் 6 முதல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தும் ஆற்றல் கொண்டவர். முரளிதரனைப் போன்று நிலையான திறனை வெளிப்படுத்தக்கூடிய பந்துவீச்சாளர்கள் எமக்கு இன்னும் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் இலங்கை அணியின் வெற்றி வேகப்பந்து வீச்சாளர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்று சொல்லலாம். சுழற்பந்து வீச்சில் ஹேரத் தலைசிறந்த வீரர் என்பதை நிரூபித்து வருகின்றார். அவருக்கு அணியின் ஏனைய பந்துவீச்சாளர்கள் பக்கபலமாக இருந்தால் டெஸ்ட் போட்டியில் நாங்கள் வெல்ல முடியும் என்பதை நம்பலாம்.

### பாகிஸ்தானை வெல்வோம்

முரளிதரன் ஓய்வு பெற்ற பின்னர் நாங்கள் ஆடிய 11 டெஸ்ட் போட்டிகளில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. அதில் நாங்கள் 2 ஆட்டங்களில்தான் தோற்றோம். 9 ஆட்டங்களைச் சமன் செய்துள்ளோம். இதனை மோசமான சாதனையென்று சொல்ல முடியாது. தோற்ற இரு ஆட்டங்களும் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய வலுவான அணிகளிடம்தான் தோல்வி கண்டிருக்கிறோம். இதற்கு மோசமான துடுப்பாட்டமும் ஒரு காரணமாகும்.

பாகிஸ்தான் அணியில் அனுபவம் மற்றும் திறமை மிக்க இளம் வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். அவர்களின் சவாலைச் சமாளித்துப் பாகிஸ்தானைத் தோற்கடிக்க முடியுமென்று நினைக்கிறேன். புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜெப் மார்ஷ் இலங்கை கிரிக்கெட் அணியை முன்னோக்கி எடுத்துச்செல்வார் என்று நம்புகிறேன். எங்களிடம் உள்ள குறைகளைக் களைந்து நல்ல நிலைக்குத் திரும்புவோம். இவ்வாறு டில்சான் கூறியுள்ளார்.

# தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி

(ஜோகன்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடியது. முதற் போட்டியில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இரண்டாவது போட்டி நேற்று ஜோகன்ஸ்பேர்க்கில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்களை எடுத்தது. அறிமுக வீரரான மார்ஷ் கடைசி ஓவரில் 3 சிக்ஸர் விளாசி 36 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக வைட் 39 ஓட்டங்களை விளாசினார்.

அடுத்து ஆடிய தென்னாபிரிக்கா தொடக்கத்தில் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தபோதிலும் கடைசி நேரத்தில் பர்னல் (29), திரோன் (30) அட்டகாசமாக ஆடி அணியை வெற்றி பெறச் செய்தனர். தென்னாபிரிக்கா 19.1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களுடன் வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் முடிபடைந்தது. இரு அணிகளுக்கிடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நாளை தொடங்குகிறது.

# ஷங்காய் டென்னிஸில் வெற்றி; பெடரரைப் பின் தள்ளினார் முர்ரே

(ஷங்காய்)

சீனாவில் நடைபெற்று வந்த ஷங்காய் ஓபன் டென்னிஸ் போட்டியில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இதன்மூலம் சர்வதேச ஆடவர் டென்னிஸ் தரவரிசையில் மூன்றாவது இடத்திலிருந்த சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரைப் பின் தள்ளிய முர்ரே மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

ஷங்காய் ஓபனில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் டேவிட் பெரரை முர்ரே எதிர்கொண்டார். ஒரு மணிநேரம் 45 நிமிடங்கள் விறுவிறுப்பாக நடைபெற்ற இம்மோதலில் 7-5, 6-4 என்ற செட்களில் முர்ரே வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

கடந்த சில வாரங்களில் முர்ரே வெல்லும் மூன்றாவது பட்டம் இதுவாகும். சமீபத்தில் தாய்லாந்து, ஜப்பான் ஓபன் டென்னிஸ் இறுதி ஆட்டத்தில் நடாலை வென்று முர்ரே பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார்.

புதிய தரவரிசைப் பட்டியல் திங்கட்கிழமை வெளியிடப்படும். இதில் முர்ரே மூன்றாவது



இடத்தைப் பிடித்தமை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். முதலிடத்தை ஜோகோவிச்சும் இரண்டாவது இடத்தை நடாலும் தக்கவைத் துக் கொண்டுள்ளனர்.

ஷங்காய் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் பங்கேற்கவில்லை. எனவே அவர் தரவரிசையில் பின்தங்கியுள்ளார். கடந்த 8 ஆண்டுகளாக அவர் தரவரிசையில் முதல் மூன்று இடங்களிலேயே இருந்து வந்துள்ளார். இப்போது பின்னடைவைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரக்பி உலகக் கிண்ணம்; இறுதிச் சுற்றில் பிரான்ஸ் - நியூசிலாந்து அணிகள் மோதல்

உலகக் கோப்பை ரக்பி போட்டிகளின் நேற்றைய இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதன் மூலம் இறுதிப்போட்டிக்கு நியூசிலாந்து அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்றைய போட்டியில் பலம் வாய்ந்த களத்தடுப்பு மற்றும் வேகமான பந்து கடத்தல் என்பவற்றினால் ஆரம்பத்திலேயே நியூசிலாந்து ஆதிக்கம் செலுத்தியது.

அவ்வணியின் மா நோனு வைத்த அபாரமான ட்ரை நியூசிலாந்துக்கு 5 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தது. இறுதிவரை அவுஸ்திரேலியாவினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. போட்டி முடிபடைந்தபோது 20-06 என நியூசிலாந்து வெற்றி பெற்றது.

நியூசிலாந்து இறுதிப் போட்டிக்குச் செல்லத் தகுதியான அணிதான். அவர்களது ஆட்டத்திற்கு முன்னால் எம்மால் ஈடுகொடுக்க முடியவில்லை என அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஹோர்வில் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் உலகக் கோப்பை ரக்பி இறுதிப் போட்டியில் நியூசிலாந்து - பிரான்ஸ் அணிகள் மோதவிருக்கின்றன. 1987ஆம் ஆண்டு இவ்விரு அணிகளும் இறுதிப்போட்டியில் மோதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜூவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134



# போராட்டங்கள் அதிகரித்தால்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதப் போராட்டம் வவுனியா நகரசபை மைதானத் தில் நேற்று இடம்பெற்ற போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைகளை மாற்றி வெலிஓயா எனும் புதிய பிரதேச செயலர் பிரிவை உருவாக்குவதன் மூலம் அந்த மாவட்டத்தின் இனவிகிதாசாரத்தை மாற்றி இணங்களுக்கிடையில் கசப்புணர்வையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் செயற்பாட்டை உடன்நிறுத்த வேண்டும்.

போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டு உறவுகளையும் சொத்துகளையும் இழந்து நிற்கும் நிலையில், காணிப்பதிவு எனும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மோசடியான நில அபகரிப்புச் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் காணி, வீடுகளற்று நிர்க்கதியான நிலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவக் குடியேற்றங்கள் மற்றும் பெரும்பான்மையின மக்களின் குடியேற்றங்களை ஏற்படுத்துவதனூடாக இன ஒற்றுமையைக் குலைக்கும் செயற்பாட்டினை உடன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணா விரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எல்லை மீள்நிர்ணயச் செயற்பாடுகளைத் தற்போதைக்கு நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை என அரசாங்கத்திற்குத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இது தொடர்பில் முல்லைத்தீவில் இடம்பெற்ற கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலுவாகச் சொல்லியிருக்கின்றனர். அது போல் வவுனியாவிலும் தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது.

இது இலங்கை முழுவதும் நடத்தப்படும் செயற்பாடு என அரசாங்கம் கூறலாம். அது சிலவேளை சரியாகவும் இருக்கலாம். ஆனால் வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரையில் இது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக மாற்றப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றனர். இராணுவத்தால் காணிகள் அபகரிக்கப்படுகின்றது தமிழர்களது காணிகளை இராணுவம் பிடித்துவைத்துள்ளது என பல செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

இவை ஜனாதிபதிக்குத் தெரியாமல் இடம்பெறவில்லை. ஆகவே யுத்தம் முடிந்த பின்னர் இலங்கை அரசாங்கம் தமது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஓர் சிங்கள பிரசன்னத்தை உருவாக்க அவர்களைக் குடியேற்றுவதற்குப் பல வேலைத்திட்டங்களை வைத்துள்ளது.

ஆகவே இலங்கையுடன் வடக்குக் கிழக்கை ஒப்பிட்டுச் சொல்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. இப்போராட்டமும் இவற்றுக்கெதிரான போராட்டமே. இலங்கை அரசாங்கம் இதனை நிறுத்தாவிட்டால் இப்படியான போராட்டங்கள் இன்னும் அதிகரிக்கும் என்பது மட்டுமல்ல சர்வதேசத்தின் மட்டத்திலும் அழுத்தங்களைக் கொண்டு வர நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில், இன்னும் தமிழர்களது நிலங்களும் வீடுகளும் பொதுச்சொத்துகளும் அரசினதும் இராணுவத்தினரதும் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவை விரைவில் பொதுமக்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். அப்படியானால் தான் அம்மக்கள் தமது சொந்த வீடுகளிலும் வீடற்றவர்கள் மீண்டும் வீடுகளை உருவாக்கவும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வாழ்வாதாரத்தைச் சீரமைப்பதற்கும் சிறப்பாக இருக்கும்.

ஆகவே தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட நிலங்கள், சொத்துகள், வீடுகள் திருப்பி ஒப்படைக்கப்படல் வேண்டும். அதைவிட இன்று வடக்குக்கிழக்கு மாகாணங்கள் முழுவதும் சிவில் ஆட்சிமுறை இருக்கவில்லைஎன்பது எமது கருத்து. இராணுவத்தினுடைய ஆதிக்கமும் அவர்களுடைய கட்டளைகளும் இப்போதும் நடைமுறையில் இருப் பதால் எமது மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தி வருவதையிட்டு நாம் பெரும் கவலையடைந்திருக்கிறோம். இது ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதாக இல்லை.

ஜனநாயகம் எமது மண்ணில் நிலைகொண்டிருக்காவிட்டால் எமது மக்கள் மேலும் அடக்கு முறைகளுக்கு உள்ளாகும் நிலை யேற்படும் என்றார். (சு)

# நல்லிணக்க ஆணை...

வெளியிட்ட பின்னரே இலங்கைக்கு எதிரான யுத்த குற்றம் பற்றிய குற்றச்சாட்டுக்களை ஆராய வுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது.

அதே சமயம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தின் கூட்டத்தில் ஆராய்வதற்கு சமூகம் அழுத்தம் பிரயோகித்து வருகின்றது. (எ-9)

# கல்விச் செயற்பாட்டை...

பதாகைகளையும் கைகளில் ஏந்தி நின்றனர்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஒன்று கூடி தமது எதிர்ப்பை காட்டிய மாணவர்கள் பின்பு பேரணியாக வீதிக்கு வந்ததோடு வீதியில் ரயரினை எரித்தும் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

இதேவேளை மாணவர்கள் வீதியில் பேரணியாக வந்தபோது பொலிஸார் தலையிட்டு கலைந்து போகுமாறு அறிவுறுத்தினர்.

இருந்தும் மாணவர்கள் திட்டமிட்டபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 9.30 மணியளவில் ஆரம்பமான எதிர்ப்பு போராட்டம் நண்பகல் வரை தொடர்ந்து இடம் பெற்றது.

அத்தோடு உரிய தீர்வுவரும்வரை தமது கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணிக்கப் போவதாகவும் மாணவர் ஒன்றியத்தினால் விடுவிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (எ-6)

# நில அபகரிப்புக்கு எதிரா...

விரதம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வவுனியா நகரசபை மைதானத்தை சூழவும் ஏராளமான பொலிஸாரும் இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் மைதானத்திற்கு செல்லும் வீதிகள் அனைத்தும் பொலிஸாரால் மூடப்பட்டு மக்கள் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 7.00 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், சி.சிறிதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எப்.பத்மநாபா அணியின் செயலாளர் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், முன்னாள் பிரதி அமைச்சர் சுந்தரமூர்த்தி முகமது அபூபக்கர், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸாரால் நகர சபை மைதானத்தின் வாயிற் கதவுகளும் பூட்ட முற்பட்டபோது உண்ணாவிரதத்தில் பங்கேற்ற அனைவரும் மைதான வாயிற் கதவருகில் சென்று பொலிஸாருடன் முரண்பட்டுக்கொண்ட நிலையில் பொலிஸார் அவ்விடத்தைவிட்டு விலகிய பின்னர் வாயிற்கதவுகளை வவுனியா நகரசபையின் தலைவர் ஐ.கனகையா திறந்துவிட்டிருந்தார்.

எனினும் பாதைகள் மூடப்பட்டமை தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் மக்களை பங்களிக்க விடவில்லையாயின் வீதியில் இறங்கி போராடுவோம் என்றார்.

இப் போராட்டத்தில் தீண்டாதே! தீண்டாதே! எம் இனத்தை தீண்டாதே! திருடாதே! திருடாதே! எம் நிலத்தை. திருடாதே! அரசே! நில ஆக்கிரமிப்புத்தான் உனது தீர்வுத்திட்டமா? சிதைக்காதே! சிதைக்காதே! ஒற்றுமையை சிதைக்காதே! எமது கோரிக்கைகளை நிறைவேற்று! இல்லையேல் தொடரும் எமது போராட்டம்! வெலி ஓயாவில் சிங்கள பிரதேசசெயலகத்தை நிறுவுவதை நிறுத்து என்ற பாதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. இவ்வுண்ணா விரதப்போராட்டம் மாலை 4 மணிக்கு பொதுமக்களால் பழரசம் கொடுத்து நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. (எ)

தேவை
எழுதுநர்,
விற்பனையாளர்,
கணக்கு பதியக் கூடியவர்கள் தேவை.
தொடர்பு:-
0772174751
வேலை இடம் :- யாழ் நகர்
(6622)

கண்ணீர் அஞ்சலி
எமது பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு. எம். கருணாநிதி அவர்களின் அன்புத் தந்தை
அமரர் வைத்திலிங்கம் மகாதேவன்
16.10.2011 அன்று சிவபதம் அடைந்துள்ளார். இவரது பிரிவால் துயருற்று இருக்கும் அனைத்து உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
முகாமைக் கற்கைகள் வணிகபீட விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மற்றும் மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.
(6617)

கார் வாடகைக்கு
அதிநவீன சொகுசுக் கார்கள் வாடகைக்கு கிடைக்கும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :-
0776237546





(6615)

DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
A\L - 2012
புவியியல் - N. Babu
PAPER CLASS
(சனி, ஞாயிறு - 12 Noon)
- அலகு ரீதியிலான மீட்டல் பரீட்சைகளுடன்
- வெளிமாணவர்களுக்கு தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
(6621)

ஆடைகளின் அதிநவீன சோலை
தீபாவளியை முன்னிட்டு...
ஸ்ரைல் பார்க்
உங்கள் எண்ணங்கள் எங்களிடம்....
புத்தம்புதிய அழகிய டிசையின்களில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடைகளிற்கு நாடவேண்டிய ஒரே இடம்
STYLE PARK
171, K.K.S, ROAD, JAFFNA.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.